விலை : 20.00 website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 06 சனிக்கிழமை (22.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய

## கூட்டு எதிர்க்கட்சி அறிவிப்பு



(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷவின் பூரண ஆசீர்வாதத்துடன் களமிறக்கப் படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்துள்ளார்.
(23-ம் பக்கம் பார்க்க...)

## நாட்டுக்கு ஆபத்து - சிங்கள ராவய

(கொழும்பு)
காணாமல்போனோர் செயலக சட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட்டுள்ளதால், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.
ராஜகிரிய சத்தர்மாராஜித விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 23

## 137-வது நாளாக தொடரும் போராட்டம்


இன்று 137 ம் நாள்

(பனிக்கன்குளம்)
தமது உறவுகளுக்கு என்ன நடந்தது அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று பதில் கூறும் வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு 24

## ஒக்டோபரில் தேர்தல் நடத்த ஒகஸ்டில் திருத்த சட்டமூலம்

### வேண்டும் என்கிறார் மகிந்த

(கொழும்பு)
எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டுமானால் அது தொடர்பான விசேட திருத்த சட்டமூலம் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் வாரத்திற்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டால் தேர்தலை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சி சபைகள் திருத்த சட்டமூலம் தொடர்பிலும் இதில் பெண்களுக்கான ஒதுக்கீடு 04

## வானிலிருந்து சொரிந்த திரவத்தால்

# வேம்படி மகளிர் பாடசாலை மாணவியர் 16 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)
யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நேற்றைய தினம் வானத்தில் இருந்து சொரிந்த மஞ்சள் நிற திரவத்தால் (துளிகளால்) பாதிப்படைந்த 16 மாணவிகளும், ஒரு ஆசிரியையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.
இது தொடர்பில் யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் கருத்து தெரிவிக்கையில்,
இன்றைய தினம் (நேற்று) காலை மாணவிகள் வெளியே கூடியிருந்தனர். அப்போது வானில் இருந்துமஞ்சள் நிற திரவம் சொரிந்துள்ளது.
அது மாணவியரின் ஆடைகள் மற்றும் உடலில் விழுந்தது. அது துர்நாற்றம் வீசியதாக தெரி 23

## பேருந்து மீது கல் வீச்சு தாக்குதல்

(கிளிநொச்சி)
யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்றின் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இச்சம்பவத்தில் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன் பேருந்து சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இச்சம்பவம் ஏ9 வீதி 24

# புத்தூர் வங்கி அருகாமையில் முதியவரை பந்தாடிய பேருந்து

## ஸ்தலத்தில் பலி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் புத்தூர் வங்கிக்கு அருகாமையில் முதியவர் ஒருவரை பேருந்து மோதித் தள்ளியதில் 24

## சி.ஐ.டியினரின் அழைப்பை நிராகரித்தார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட அழைப்பை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நிராகரித்துள்ளார்.
கடந்த மே மாதம் யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பிலும் அந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி முல்லைத்தீவிற்கு வரக் கூடாதென்றும் 24

## கா.போ அலுவலகத்தினை வரவேற்பது வேதனையானது

(பரந்தன்)
காணாமல் போனவர்களின் அலுவலகத்தினை சர்வதேசமும், புலம்பெயர் அமைப்புக்களும் வரவேற்பது வேதனைக்குரியது என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளன.
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் 152 ஆவது நாட்களாக தொடர் போராட்டத்தில் 04

## புதிய அரசியலமைப்பு தேவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை

### அனுரகுமார திஸாநாயக்க கருத்து



(கொழும்பு)
புதிய அரசியல் அமைப்பில் அதிகார பகிர்வு தொடர்பில் இதுவரையில் எந்தவித தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவில்லை. ஐக்கியம், பௌத்த மதத்திற்கான முன்னுரிமை என்ற விடயத்தில் எந்தவித விவாதத்திற்கும் இடமில்லை என மக்கள் விடுதலை 24

## அனந்தி சசிதரனுக்கு 144 மில். ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண ஆளுநர் நிதிய வைப்பில் இருந்த 144 மில்லியன் ரூபாயை வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் பொறுப்பேற்க வேண்டும் என வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
வட மாகாணசபை கடந்த மூன்று வருடங்கள் 9 மாத கால பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கை 24

## மோ.சைக்கிள் மோதி பல்கலை மாணவன் பலி

(மன்னார்)
மன்னார் - நானாட்டான் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த விபத்து நேற்று மாலை 3.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதில் நானாட்டான் பகுதியில் நறுவிலிக்குளம் கிராமத் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டவிரோதமாக மணலேற்றியோர் கடற்படையினர் மீது தாக்குதல்

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்தவர்கள் கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டதில் கடற்படை வீரர் ஒருவர் சிறுகாயமடைந்ததுடன் ஆகாய துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கடத்தல் காரர்களை கடற்படையினர் விரட்டியடித்த தாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை கடலோரக் கண்காணிப்பில் ஈடுபட்டுவிட்டு கடற்படையினர் துவிச்சக்கரவண்டியில் முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது வல்லிபுரத்தை அண்டிய பகுதியில் சட்ட விரோதமான முறையில் ஹன்ரர் வாகனம் ஒன்றில் மணல் ஏற்றி வந்தவர்கள் கடற்படையினர் மீது கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டனர்.

இது தொடர்பில் கடற்படைத்தளத்துக்கு அவர்கள் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து கடற்படைத் தளத்தில் இருந்து உதவிக்கு பஸ் ஒன்றில் கடற்படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

மணல் கடத்தி வந்தோர் தொடர்ச்சியாக கற்களை வீசித் தாக்கியதில் கடற்படை வீரர் ஒருவர் சிறிய காயமடைந்தார்.

இதனையடுத்து கடற்படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது கடத்தல்காரர்கள் தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து இராணுவத்தினர், பொலிஸார் அப்பகுதிக்கு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதான தகவல் பரவியதையடுத்து பருத்தித்துறை - மருதங்கேணி வழி யாகப் பயணித்தோர் அச்சத்துடன் பய ணித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (மு-60)

# விவசாயத்தின் மூலமே நாட்டை கட்டியெழுப்பலாம்

## – ஜனாதிபதி

விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதாரத்தின் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு சிறந்த பொருளாதார நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பல உணவு பொருட்களை நாட்டில் உற்பத்தி செய்து உணவில் தன்னிறைவு அடைய வேண்டும்.

இந்த நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

புனரமைக்கப்பட்ட கந்தளாய் கங்தலாவ யூனிட் 12 குளத்தை மக்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். (மு-11)

# சரியாக செல்கையில் குழப்ப வேண்டாம்

## கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் வேண்டுகோள்

சரியான திசை நோக்கிச் செல்பவர்களை குழப்பும் வகையில் செயற்பட வேண்டாம் என வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ வரன் அவையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த மூன்றரை வருட காலச் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் விசேட அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபா மண்டபத்தில் சபைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகியது.

கல்வி அமைச்சு தொடர்பான எதிர்க்கட்சி தலைவரின் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கதைப்பது போன்று எங்களுக்கும் பல விடயங்கள் குறித்து நன்றாகக் கதைக்க முடியும். ஆனாலும் சபையின் நாகரிகம் கருதி அவற்றை நாங்கள் கதைக்கவில்லை.

உண்மை என்று அறியாது நீங்கள் நினைப்பதெல்லாம் உண்மை என்றோ அல்லது அவை மட்டும் தான் சரி என்றோ நினைத்து துள்ளிக் குதிக்க வேண்டாம்.

நாங்கள் இப்போது சரியான திசை நோக்கிச் செல்கின்றோம். ஆகவே அதனைக் குழப்பும் வகையில் செயற்பட வேண்டாம். தவறுகள் இருந்தால் திருத்தலாம். ஆனால் உண்மைக்குப் புறம்பான வகையில் அநீதிகள் இழைக்கப்படக் கூடாது.

எனவே இனியாவது உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்துவதை எதிர்க்கட்சித் தலைவர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தற்போது கல்வியை சீரமைக்கின்ற நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம் என மேலும் தெரிவித்தார்

விவசாய அமைச்சு தொடர்பான எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துகளுக்கு பொ.ஐங்கரநேசன் பதிலளிக்கையில்,

உண்மைக்குப் புறம்பான வகையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். யாரோ சொன்னார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் என்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றார்.

குறிப்பாக மாங்குளத்தில் கரும்புச் செய்கையை நான் மறித்ததாக இப்போது புதிதாக கதை விடுகின்றார். அவ்வாறு மாங்குளத்தில் கரும்புச் செய்கைக்கு மட்டுமல்ல மாதுளம்பழச் செய்கைக்கு கூட யாரும் எங்களிடம் வரவில்லை.

இந்த எதிர்க்கட்சித் தலைவர் பற்றியும் கதைகள் எமக்குச் சொல்லப்படுகின்றன. ஊடகங்களில் வருவதற்காக யார்ரோ சொன்னார்கள் என்று நாங்களும் அவைகளை அவர் போல சொல்ல முடியும்.

அது சபை நாகரிகமல்ல. முன்னைய அமைச்சர் ஒருவர் ஆலயங்களுக்கு நிதி வழங்குவதாக அறிவிக்கப்பட்டு காசோலையும் வழங்கப்படும். பின்னர் வேறொருவர் சென்று அதை பறித்து வந்துவிடுவார். முன்னைய காலத்தில் அவ்வாறுதான் இருந்தது. அதேபோலதான் மற்றவர்களும் இருப்பார்கள் என நினைக்கிறார் போலும்.

ஆனால் நாங்கள் மக்களுக்காகவே செயற்பட்டோம். மாகாண அமைச்சுகளில் ஒரு சதம் கூட ஊழலோ அல்லது மோசடியோ இடம்பெறவில்லை. அது நான் மட்டுமல்ல எந்த அமைச்சும் அதனைச் செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் உண்மைக்குப் புறம்பான வகையில் அமைச்சுக்கள் மீதான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார் என மேலும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், சபையில் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் உண்மையுள்ளதா இல்லையா என்று ஆராய வேண்டும். அத்தோடு எதிர்காலத்தில் என்ன வகையிலான செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்து பேசி முடிவெடுக்க வேண்டுமென தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பி.ப 2.15 மணியளவில் சபையை ஒத்திவைப்பதாகவும் விசேட அமர்வு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதியும், மாகாண சபையின் அடுத்த அமர்வு இந்த மாதம் மாதம் 27ஆம் திகதியும் நடைபெறும் என அவைத்தலைவர் அறிவித்தார். (மு-9)


## ஏல விற்பனை

யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தில் பாடசாலை உபகரணங்கள் 2017.08.08ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது.

(9883) அதிபர்



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCY

Applications are invited by me up to 21.08.2017 from suitably qualified persons for the following post.

1. **FARM MANAGER (GRADE III)**

**Qualifications:**

Should possess a four year degree in Agriculture from a recognized University/HEI with not less than two (02) years of Field Experience in Crop, Husbandry and/or Animal Sciences in a recognized establishment after graduation.

**Salary Scale :** U-EX 1(II)

Rs. 49,860 - 3X 1,125 - 53,235 (EB) 54,475; 12X1,240 - 69,355 /- p.m. as at 01.01.2020
Rs. 35,556 - 3X 801 - 37,959 (EB) 38,842; 12X883 - 49,438 /- p.m. as at 01.01.2017

**Selection** : By Structured Interview

**Age limit for the above posts: Not more than 45 years**

(**Note** – Age limit is not applicable for applicants in the Government Departments / State Corporations and Statutory bodies )

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the **specified** form will be accepted. **(Please annexed copies of relevant documents)**. The envelope containing the dully filled application form must bear **"Post of Farm Manager"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar **on orbefore 21.08.2017.**

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna.
21.07.2017. (C-9138)



## காணி விற்பனைக்கு

### சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்

A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (9884)

தொடர்பு

**077 873 0129**



குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன் வழங்கும்**
**சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும் மனவளக்கலையின்**
**ஆரம்ப ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள்**

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு பயிற்சிகள்

இடம் : யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோவில்
காலம் : 23.07.2017 (ஞாயிறு) மாலை 5.00 மணி

அகத்தாய்வு - 01

23.07.2017 காலை 9 மணிக்கு நடைபெறும்.
மீள்பயிற்சி அன்பர்களும் கலந்து கொள்ளலாம்.

வழங்குபவர்

தமிழகத்தில் இருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை
பேராசிரியர் அருள்நிதி **இந்திரா சண்முகசுந்தரம்** அவர்கள்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
**021 222 2772, 077 772 6732, 071 440 3268, 077 123 5646**

*வாழ்க வளமுடன்*

யாழ்.அறிவுத்திருக்கோவில், மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(9882)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஆயுதக்குழு குறித்து உஷார் நிலையில் இலங்கை

## அமெரிக்க அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ்.ஆயுதக்குழு அல்லது அதன் பிரிவுகள் உருவாகும் நிலைமை ஏற்படாதிருக்கும் வகையில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளும் புலனாய்வு நிறுவனங்களும் முழு உஷார் நிலையில் உள்ளன என பயங்கரவாதம் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் 2016ஆம் ஆண்டுக்கான நாடுகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையர்கள் 36பேர் சிரியாவுக்குச் சென்றனர் என்றும் அவர்களில் சிலர், ஐ.எஸ்.ஐ.எஸ்.ஆயுதக்குழுவில் சேர்ந்தனர் என்றும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டிருந்தார். எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ். அல்லது ஆயுதக்குழுக்கள், இலங்கையில் பௌதிகரீதியாக இருக்கவில்லை எனவும் கடந்த வருடம் ஜனவரி மாதம் கூறினார் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016இல், அமெரிக்காவுடனான பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பயிற்சி மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது.

ஆனால், இருபக்க பாதுகாப்பு உறவு தொடர்ந்து வளர்ந்தது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக, இலங்கை விமானப் படையுடன் இணைந்து ஓர் உயர்நிலை அமெரிக்க பி-8 கடல் காவல் விமானம் பயிற்சியை நடத்தியது.

இலங்கையூடாக வேறு நாடுகளுக்குள் ஊடுருவக்கூடிய வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளிகளைப் பிடிக்கும் இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலை இந்தப் பயிற்சி அதிகரித்தது.

இலங்கையின் பாதுகாப்புச் சேவைகள், புலிகளின் மீள் வருகையின் மீது கவனத்தைச் செலுத்துவதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

இலங்கையர்கள், ஐ.எஸ். ஐ.எஸ்-உடன் அல்லது வேறு பயங்கரவாதக் குழுக்களுடன் இணைதல் போன்ற புதிதாக உருவாகும் பிரச்சினைகள் மீதான அரசாங்கத்தின் கவனம் அரசாங்கத்தை நெகிழ்ச்சித் தன்மையுள்ள பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க வைத்துள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இரு பௌர்ணமிகள் முடிந்த பின்னர் அதிர்ச்சி காத்திருக்கின்றது-மகிந்த

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து மிகப்பெரிய குழுவொன்று விரைவில் தம்முடன் இணையவுள்ளது எனவும் இன்னும் இரு பௌர்ணமிகள் முடிந்த பின்னர் அதிர்ச்சி காத்திருக்கின்றது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் ஒரு குழு இணையவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு அணி அரசியல் அமைப்புச் சபையில் இருந்து கொண்டும் மற்றைய அணி வெளியே நின்றும் புதிய அரசியல் அமைப்பை தடுப்பதே தமது திட்டம் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற எதிரணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்தில் புதிய அரசியல் அமைப்பு குறித்தும் ஏனைய நகர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (இ-7)

## உடற்பயிற்சியில் ஈடுபடும் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடற்பயிற்சியில் ஈடுபடும் ஒளிப்படங்கள் சிலவற்றை மகன் நாமல் ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் இந்த படங்களை வெளியிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷ உடற்பயிற்சியில் ஈடுபடும் படங்கள் சிலவற்றை இதற்கு முன்னரும் அவர் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### மாணவி வித்தியா கொலை வழக்கு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க பணிநீக்கம்

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவை பணியில் இருந்து நீக்குவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

லலித் ஜயசிங்கவை பணியில் இருந்து நீக்குமாறு கூறி பொலிஸ்மா அதிபரினால் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின்படி அவர் பணி நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி இந்த பணி நீக்கமானது நேற்று முதல் அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் பிரதான சந்தேகநபர் மகாலிங்கம் சசிகுமார் தப்பிச்செல்ல உதவியதாக குற்றம் சுமத்தப்பட்ட லலித் ஜயசிங்க கடந்த 15ஆம் திகதி குற்றத் தடுப்பு பிரிவினரால் கைதி செய்யப்பட்டார்.

அவர் எதிர்வரும் 25ஆம் திபதி வரையில் நீதிமன்ற உத்தரவுப்படி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீரவன்ச விலகியதால் அரசியல் அமைப்பு சட்ட உருவாக்கம் பாதிக்காது

அரசியலமைப்புச்சட்ட வாக்க சபையில் இருந்து தேசிய சுதந்திர முன்னணி விலகினாலும் புதிய அரசிய லமைப்புச் சட்டத்தை உரு வாக்குவதில் அந்த முன்ன ணியின் விலகல் பாதிப்பை ஏற்படுத்தாது என சட்டவ ல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள கொழும்பு சட்டக்கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரான மேனகா ஹரன்கஹா,

முதலாவது குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க கடந்த 1972ஆம் ஆண்டு முழு நாடாளுமன்றமும் அரசியலமைப்புச் சட்டவாக்க சபையாக இயங்கியது.

தேசிய சுதந்திர முன்னணி விலகியதுபோல், அப்போதும் சில கட்சிகள் விலகின. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்க் கட்சிகள் விலகிக்கொண்டன.

இந்தக் கட்சிகள் விலகியதால், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் எந்தத் தடையும் ஏற்படவில்லை. ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வந்தது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்புச் சட்டவாக்க சபை எப்படி இயங்கினாலும் அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறதா? அல்லது புதிய அரசியலமைப்புச் சட் டம் நிறைவேற்றப்படவுள் ளதா? என்பதை முதலில் தெளிவுப்படுத்திக்கொள்ள வேண்டும் என சட்டத்தரணி மகாநாம ஹேவா தெரிவித்தார்.

மேலும், எது எப்படி இருந்த போதிலும் அரசியலமைப்புச் சட்டவாக்க சபையிலிருந்து தாம் விலகியுள்ளதால், ஏற்பட்டுள்ள புதிய நிலைமை தொடர்பில் சபாநாயகர் விரைவில் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (இ-7)

## இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகள் மேலும் முன்னேற்றமடைய வேண்டும்

### பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு வலியுறுத்து

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மேலும் முன்னேற்றமடைய வேண்டுமென பிரித்தானியா தெரிவித்துள்ளது. பிரித்தானிய பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பிலான கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் வரவேற்கப்பட வேண்டியது எனவும் எனினும் இன்னும் பல்வேறு விடயங்களில் மேலும் முன்னேற்றம் பதிவாக வேண்டியது அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மேம்பாடு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு 2016 முதல் 2019ஆம் ஆண்டு வரையில் பிரித்தானிய அரசாங்கம் 6.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் களை வழங்கி வருவதாக அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பிரித்தானியா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)


## கொக்கேய்ன் போதைப்பொருள் மீட்பு மூன்று அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொக்கேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்ட காரணத்தினால், சுங்கத் திணைக்களத்தின் மூன்று அதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இரத்மலானைப் பிரதேசத்தில் பாரியளவில் கொக்கேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பில் ஏழு பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்தநிலையில் கொக்கேய்ன் போதைப் பொருளுடன் கொள்கலனை விடுவித்த சுங்கத் திணைக்கள அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கொள்கலனை விடுவித்ததனைத் தொடர்ந்து, அந்தக் கொள்கலன் இரத்மலானைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுமார் 3.2 பில்லியன் ரூபா பெறுமதியான கொக்கேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு.எஸ். ஓபன் பட்மிண்டன் தொடரில் காலிறுதியில் மூன்று இந்திய வீரர்கள்

## காஷ்யப், சமீர் வர்மா, பிரணாய்



யு.எஸ். ஓபன் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மிண்டன் தொடரில் இந்திய வீரர்கள் காஷ்யப், சமீர் வர்மா மற்றும் பிரணாய் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்க ஓபன் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய வீரர் காஷ்யப் தனது 2-வது சுற்றில் இலங்கையின் நிலுகா கருணாரத்னவை 21-19, 21-10 என நேர்செட்டில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

முதல் சுற்றில் ஹங்கேரி வீரருக்கு எதிராக விளையாடும்போது, 21-18, 17-6 என காஷ்யப் முன்னிலையில் இருக்கும்போது எதிர்த்து விளையாடிய வீரர் போட்டியில் இருந்து விலகுவதாக தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து காஷ்யப் 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

காஷ்யத் காலிறுதியில் இந்தியாவைச் சேர்ந்த சமீர் வர்மாவை எதிர்கொள்கிறார். சமீர் வர்மா குரோஷியா மற்றும் பிரேசில் வீரர்களை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு வீரர் பிரணாய் அயர்லாந்து வீரரை 21-13, 21-17 எனவும், நெதர்லாந்து வீரரை 21-8, 14-21, 21-16 எனவும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். பிரணாய் காலிறுதியில் ஜப்பான் வீரரை எதிர்கொள்கிறார்.

ஆண்கள் இரட்டையர், பெண்கள் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய வீரர்கள், வீராங்கனைகள் தோல்வியை சந்தித்தனர்.

# இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்டில் சண்டிமல் விலக அணித் தலைவராகிறார் ஹேரத்



இலங்கை அணியின் டெஸ்ட் அணித் தலைவர் சண்டிமல், நிமோனியா காய்ச்சலால இந்தியாவிற்கு எதிரான காலி டெஸ்டில் இருந்து விலகியுள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது. முதல டெஸ்ட் வருகிற 26ஆம் திகதி காலி மைதானத்தில் தொடங்குகிறது. இதற்காக இரு நாட்டு வீரர்களும் தயாராகி வருகிறார்கள்.

இந்நிலையில் இலங்கை அணியின் தலைவர் சண்டிமல் காய்ச்சலால் அவதிப்பட்டார். இதனால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு ரத்த பரிசோதனை செய்து பார்க்கும்போது, நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது. இதனால் ஒரு வாரத்திற்கு மேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டும் என்று வைத்தியர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனால் காலி டெஸ்டில் சண்டிமல் கலந்து கொள்ளமாட்டார் என்று இலங்கை அணி முகாமையாளர் குருசிங்கா கூறியுள்ளார்.

ஆகவே, காலி டெஸ்டில் சுழற்பந்து வீச்சாளர் ஹேரத் அணித் தலைவராக செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த முறை இந்தியா இலங்கை சென்றிருந்த போது காலி மைதானத்தில் இந்தியாவிற்கு எதிராக 162 ஓட்டங்கள் குவித்த சண்டிமல் இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒக்டோபரில் தேர் ...

குறித்தும் ஆராய்வதற்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய கூட்டம் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாரா ளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் திருத்த சட்டமூலத்தில் இடம்பெற வேண்டியுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதன்போது கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய,

எவ்வாறிருப்பினும் வட்டாரங்கள், விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகிய விகிதாசாரம் 70:30 ஐ விட மாற்றப்பட வேண்டுமென மற்றும் விகிதாசார முறையின் கீழ் பிரதிநிதியொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான 5% ஆகக் குறைந்த எல்லையைக் குறைத்தல், உறுப்பினர் எண்ண்ணிக்கை அதிகளவில் அதிகரித்துக் காணப்படல் போன்ற விடயங்கள் தொடர்பாக அரசியல் கட்சி முகவர்களினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை உங்களுக்கு அறிக்கையிட விரும்புகின்றேன். (மு-11)

## கா.போ அலுவல ...

ஈடுபட்டுவரும் இடத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் எமது பிள்ளைகளின் பெயர் விபரப்பட்டியலினை வெளியிடுவதாக உறுதியளித்திருந்த நிலையில் இதுவரை எமக்கான தீர்வுகள் எதுவுமே கிடைக்கவில்லை.

எம்மையும் ஐக்கிய நாடுகள் சபையினையும் ஏமாற்றுவதற்கே இந்த அலுவலகம் அமைக்கப்படுவதுடன், இது ஒருபோதுமே எமக்கான தீர்வினைப் பெற்றுத்தரப்போவதில்லை. குறித்த அலுவலகம் அமைப்பதற்கு முன்னர் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதனை நாம் வலியுறுத்துகின்றோம்.

அதற்கு எமது போராட்டத்திற்கு துணைபுரியும் அத்தனை உறவுகளும், ஊடகங்களும் துணைபுரிய வேண்டும் என மேற்படி ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-312)

# 115 பந்துகளில் 171 ஓட்டங்கள் குவித்ததால் கபிலுடன் ஒப்பிடப்படும் ஹர்மன்பிரீத் கவுர்





1983ஆம் ஆண்டு ஆண்கள் உலக கோப்பை போட்டியில் சிம்பாப்வேக்கு எதிராக 175 ஓட்டங்கள் குவித்த இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் ஆட்டத்தை நினைவுபடுத்தும் விதமாக ஹர்மன்பிரீத் கவுர் ஆட்டம இருந்தது என்று பலரால் வர்ணிக்கப்படுகிறார்.

இங்கிலாந்தில் நடந்து வரும் 11-வது மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த 2-வது அரை இறுதியில் இந்தியா 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

மழையால் 42 ஓவர்களாக குறைக்கப்பட்ட இப்போட்டியில் இந்தியா 282 ஓட்டங்கள் குவித்தது. ஹர்மன்பிரீத் கவுர் 115 பந்தில் 171 ஓட்டங்கள் குவித்தார். இதில் 20 பவுண்டரி, 7 சிக்சர் அடங்கும்.

பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய பந்து வீச்சை நம்பிக்கையுடன் எதிர்கொண்ட ஹர்மன்பிரீத கவுர் சூறாவளியாக சுழற்றி அடித்து பவுண்டரி, சிக்சர்களாக பறக்க விட்டார்.


அவரை கட்டுப்படுத்த முடியாமல் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் திணறினர். பந்தை எந்த திசையில் போட்டாலும் நாலாபுறமும் சிதற விட்டார்.

அவரது அதிரடியான ஆட்டத்தால் இந்தியா ஓட்டங்களைக் குவித்தது. நடப்பு சம்பியனான அவுஸ திரேலியாவுக்கு எதிராக சவாலான ஓட்ட எண்ணிக்கையை எடுத்தது.

இறுதிப்போட்டிக்கு இந்தியா தகுதிபெற முக்கிய காரணமாக இருந்த ஹர்மன் பிரீத் கவுருக்கு ஷேவாக், தெண்டுல்கர் உட்பட பலர் வாழ்த்து கூறி உள்ளனர்.

1983ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் (ஆண்கள்) சிம்பாப்வேக்கு எதிராக இந்திய அணித் தலைவர் கபில்தேவ் 175 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவரது இந்த ஆட்டத்தை நினைவுப்படுத்துவது போல் ஹர்மன்பிரீத் கவுர் ஆட்டம் இருந்தது என்று வர்ணிக்கப்படுகிறது.

# இந்தியா - இலங்கை அணி தொடருக்கான பந்துவீச்சு பயிற்சியாளராகிறார் சமிந்த வாஸ்



இந்தியாவிற்கு எதிரான தொடருக்கான இலங்கை அணியின் சிறப்பு பந்து வீச்சு பயிற்சியாளராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட், ஐந்து ஒருநாள் கிரிக்கெட் மற்றும் ஒரேயொரு இருபது - 20 போட்டி கொண்ட தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ளது.

டெஸ்ட் தொடர் வருகிற 26ஆம் திகதி காலியில் தொடங்குகிறது. கடந்த முறை இந்தியாவிற்கு எதிராக இலங்கை அணி டெஸ்ட் தொடரை 1-2 என இழந்தது. சமீபத்தில் சிம்பாப்வே அணிக்கெதிராக ஒருநாள் தொடரை 2-3 என இழந்தது.

இதனால் இலங்கை அணியின் பந்து வீச்சை பலப்படுத்தும் விதமாக இலங்கை அணியின் முன்னாள் தலைசிறந்த வேகப் பந்து வீச்சாளரான சமிந்த் வாஸை இந்தியாவிற்கு எதிரான தொடரில் சிறப்பு பந்துவீச்சு பயிற்சியாளராக நியமித்துள்ளது.

43 வயதாகும் சமிந்த வாஸ் இலங்கை அணிக்காக 111 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 355 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். 322 ஒருநாள் போட்டிகளில் 400 விக்கெட்டுக்கள் கைப்பற்றி முத்திரை பதித்துள்ளார்.

# பங்களாதேஷ் துடுப்பாட்ட ஆலோசகர் சமரவீரவின் பதவிக்காலம் முடிவடைகிறது



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இருந்து வந்த திலான் சமரவீரவின் பதவிக் காலம் நீட்டிக்கப்படவில்லை.

வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியில் பங்களாதேஷ் அணியும் ஒன்று. சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் டிராபி தொடரில் காலிறுதிக்கு முன்னேறிய அந்த அணி, இந்தியாவிடம் தோற்று தொடரில் இருந்து வெளியேறியது.

அந்த அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் திலான் சமரவீர செயற்பட்டு வந்தார். இவர் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். சம்பியன்ஸ் டிராபி தொடர் வரை அவரது பதவி நீட்டிக்கப்பட்டிருந்தது.

தற்போது, அவரது பதவிக்காலம் முடிவடைந்ததால் ஆலோசகராக செயற்படமாட்டார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. சமரவீரவிற்குப் பதிலாக புதிய ஆலோசகரை அந்த அணி தேடிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக் கேள்வி கோரல்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG-SD-II)-2017
## உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்.

1. தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழு சார்பில் உள்ளூராட்சித் திணைக்களம் வடமாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலை இப்போது தகவுடையோரும், தகைமை பெற்றவருமான விலைக்கேள்வி யாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.09.2016 ஆம் திகதிய 04/2016 (I) ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA)பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்ப துடன், கட்டடம்,வீதி புனரமைப்புக்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புபட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி V (Schedule / Bidding Data & Contract Data) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம். முதியோர் வளாகம், யாழ் - கண்டி வீதி, கைதடி (தொலைபேசி இலக்கம்:021 221 3728, 021 730 0343, தொலை நகல்: 021 221 5738, மின்னஞ்சல் nplocalplan@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கிலமொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம். முதியோர் வளாகம்,A-9வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து 21.07.2017 ஆம் திகதியிலிருந்து 11.08.2017 ஆம் திகதி வரைகாலை 09.00மணிக்கும் பிற்பகல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 3500.00 பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) 14.08.2017 ஆம் திகதியன்று14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், திணைக்கள பெறுகைக்குழு, உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக் களம், வடமாகாணம், முதியோர் இல்ல வளாகம், A-9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் இவ்வேலைக்குரிய கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடனேயே மேலேயுள்ளமுகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள்முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக் களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், A-9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 04.08.2017 ஆம் திகதி அன்று 14.30 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வியானது சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்தேழு 30.10.2017) வரையும் செல்லுபடியாகும்.
10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலைவிபரம் | பெறுகைக்குழு | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) (வற்நீங்கலாக) | ஒப்பந்த காலம் | தேவையானதரம் | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| NP/14/08/JF/PSDG(SD-II)/ JF/ChaPS/2017/03 | உசன் ஊர்எல்லைவீதி (ஸ்ரேசன் வீதி) திருத்தம்–சாவகச்சேரி பிரதேச சபை | திணைக்கள பெறுகைக்குழு | 16.17 | 90 நாட்கள் | C6 &C5 | 162,000.00 | 27.11.2017 வரை |
| NP/14/08/JF/PSDG(SD-II)/ JF/MC/2017/02 | நெடுங்குளம் சந்திகெலந்தோட்டம் வீதிபுனரமைப்பு (காப்பெற்) –யாழ் மாநகர சபை | திணைக்கள பெறுகைக்குழு | 19.62 | 90 நாட்கள் | C6 &C5 | 197,000.00 | 27.11.2017 வரை |
| NP/14/08/JF/PSDG(SD-II)/ JF/MC/2017/03 | நெடுங்குளம் வீதி அணைக்கட்டுசுவர் அமைத்தலும்,கற்கள் பதித்தலும் – யாழ் மாநகர சபை | திணைக்கள பெறுகைக்குழு | 16.98 | 90 நாட்கள் | C6 &C5 | 170,000.00 | 27.11.2017 வரை |
| NP/14/08/JF/PSDG(SD-II)/ JF/ValiNo/2017/01 | கடைத்தொகுதிஅமைத்தல் (முதலாவதுமாடி) – தெல்லிப்பழை–வலி.வடக்கு பிரதேச சபை | திணைக்கள பெறுகைக்குழு | 19.95 | 90 நாட்கள் | C6 &C5 | 200,000.00 | 27.11.2017 வரை |

**திணைக்களப் பெறுகைக்குழு**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வட மாகாணம்.**
**20.07.2017**

(சி-9133)

# தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம்நண்பகல் 12 மணிவரை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் பேராசிரியர் திருமதி மனோன்மணிசண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் என பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.(இ-3)

# கீரிமலை சிவபூமி மடத்தின் ஆடி அமாவாசை அன்னதானம்
## இரண்டு இசை நாடகமும் இடம்பெறும்

ஆடி அமாவாசையை முன்னிட்டு நாளை (23.07. 2017) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல் 3.30 மணி வரைக்கும் அடியவர்களுக்கு விசேட அன்னதானம் வழங்குவ தற்கு சிவபூமி அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ளது. அத் துடன் இன்று சனிக்கிழமை (22.07.2017) இரவு கீரிமலை சிவபூமி யாத்திரிகள் மடத் தில் சமய சொற்பொழிவுகள் மற்றும் பத்த நந்தனர், அரிசந்திர மயர்னகாண்டம் என்ற இரண்டு இசை நாட கமும் இடம்பெறும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார்.(இ-3)

# பிரதமரின் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் ஊழல் மோசடிகள் குறித்து முறைப்பாடு செய்ய முடியும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொது மக்கள் தொடர்பு அலுவலகத்தில் ஊழல் மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்களில் இடம் பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் இவ்வாறு முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் தொடர்பில் இந்த அலுவலகத்தில் செய்யப்படும் முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புவிசாரணை ஆணைக்குழு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு உள்ளிட்ட நிறுவனங்களுக்கு இந்த முறைப்பாடுகள் குறித்து அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.(இ-7)

# போராட்டமே ஒரே தீர்வு

மாலபே சைட்டம் தனியார் கல்லூரியை அரச உடைமையாக்கக்கோரி சைட்டத்துக்கு எதிரான மக்கள் அணியினர் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் பாரிய மக்கள் சம்மேளனம் ஒன்றை நடத்தவுள்ளதாக சைட்டத்துக்கு எதிரான மக்கள் அணியினர் தெரிவித்துள்ளனர்.

பேச்சு வார்த்தை மூலமாக தீர்வுகாணும் காலம் கடந்துள்ளது. போராட்டமே எமது ஒரே தீர்வு எனவும் தேசிய தொழிற்சங்கத்தின் தலைவர் லால் காந்த தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

22.07.2017
(ஆடி 06, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தசி மாலை 6.48 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.50 மணிவரை
சுபநேரம் 3.01-4.31 மணிவரை
இராகுகாலம் 9.01-10.31 மணிவரை
போதாயண அமாவாசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை-மூலம் அதிகாலை 5.35 மணிக்கு கட-சந் | | சூரி, செவ் |
| | | | புத ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்களே உதவ முன்வருவர், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** எப்படி நடக்குமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியூருக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உன்னதமான வாய்ப்புக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, சிறப்பான நாள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தில் நிதானத்துடன் செயற்படுவது நல்லது, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படும்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்து மாக இருப்பீர்கள், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்** அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள் புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை ஒழிக்கும் நோக்குடன் பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம் என்பன இணைந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நேற்று முன்தினம் முன்னெடுத்தன. இதன்போது வீதி நாடகம் இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம் செய்தியாளர்)

## மருதனார்மடம் சந்தையிலுள்ள மலசலகூடம் திறக்கப்படவில்லை



(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் பொதுச்சந்தையில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தும் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை எனப் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள பெரிய சந்தைகளில் மருதனார் மடம் சந்தையும் ஒன்றாகும். இச்சந்தைக்கு என அமைக்கப்பட்ட மலசலகூடக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவில்லை. எனவே இம்மலசல கூடத்தை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

## வடமாகாண சமகாலக் கல்விக்களம்-2 'நடப்பது என்ன' கருத்தாடல் களம் நாளை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியம் நடத்தும் வடமாகாணம் சார்ந்த சமகாலக் கல்விக் களம் நடப்பது என்ன எனும் தலைப்பில் கருத்தாடல் களம் - தளம் (2) எனும் நிகழ்வு நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

கள ஒருங்கிணைப்பாளராக கலாநிதி செ. சேதுராஜா கலந்து கொள்ளும் இக் கருத்தாடல் களத்தில் ஆசிரியர்கள் - பேராசிரியர்.மா. சின்னத்தம்பி, பாடசாலை அதிபர்கள்- ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன், கல்வி அதிகாரிகள்- நீர்ப்பாசன திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.ஐங்கரன், அரசியலாளர்கள்-பத்தி எழுத்தாளர், அரசியல் விமர்சகர் நிலாந்தன், பெற்றோர் - யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா, மாணவர்கள்-சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.சிவராஜா, சமூக ஊடகங்கள்- யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, சமூக நிறுவனங்கள்- கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

இக் கருத்தாடல் களத்தில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நிகழ்வில் பங்குபற்றுபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)







முன்னாள் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பிறந்ததினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நெல்லியடியிலுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர்மாலை அணிவிப்பதையும் அன்னாரின் வீட்டில் நடைபெற்ற நிகழ்வில் அமரரின் திருவுருவப் படத்திற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுடரேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மகாலிங்கம்)



2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1,2,3 ஆம் இடங்களைப் பெற்ற கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையில் அருணலு சேமிப்புக் கணக்கை பேணி வந்த மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி சுன்னாகம் வங்கிக் கிளையில் வங்கி முகாமையாளர் திருமதி. தபோதினி கஜரூபன் தலைமையில் நடைபெற்றது.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா இடம்பெற்றுள்ளது. (இ-10-101)




## பிரெஞ்சுப்புரட்சி நூல் அறிமுகம்

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவன ஏற்பாட்டில் நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு நல்லூர், சங்கிலியன் தோப்பில் அமைந்துள்ள யூரோவில் கேட்போர் கூடத்தில் பிரெஞ்சுப் புரட்சி என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

சிந்தனைக்கூட பணிப்பாளர் இரா. சிவசந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நூல் பற்றிய அறிமுக வுரையை யாழ். பல்கலைக் கழக அரச அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கமும் விமர்சன உரையை பட்ட மேற்படிப்புப் பீடத்தில் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலனும் ஆற்றுவர்.

நூல் ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக விவசாயத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.சோமசுந்தரி கிருஷ்ணகுமார், அரச அறிவியல்துறை விரிவுரையாளர் எஸ்.விக்னேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்துவர். இதனைத் தொடர்ந்து நூலாசிரியர் வாசுதேவனின் ஏற்புரை இடம்பெறும். (இ-3-8)

## குரங்குத் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானைப்பகுதியில் குரங்குகளின் அட்டகாசத்தால் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

குரங்குகள் பயிர்களை அழிப்பதாகவும் வீட்டின் ஓடுகளை சேதப்படுத்துவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனபிரதேசமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-101)

## ஊர்காவற்றுறையில் இரத்ததானமுகாம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இரத்ததானமுகாம்இடம்பெறும்.

இரத்ததானம் வழங்கி ஒத்துழைக்குமாறு ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வை.யதுநந்தனன் அறிவித்துள்ளார். (இ-7)





இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கான திசைமுகப் பயிற்சி நிறைவு விழா கடந்த 18 ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் தேசிய கல்வியியற் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மனிதவள அபிவிருத்திக் கிளையின் பிரதிப் பணிப்பாளர் பந்துலசரத் கலந்து சிறப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 78 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கியின் திருநெல்வேலிக் கிளையினரால் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வங்கிக் கிளையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் குருதிக் கொடை ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார். (8-3)


60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



22.07.2017

திரு. நடராசபிள்ளை இராசகுமாரன்

(நிர்வாக கிராம உத்தியோகத்தர், தென்மராட்சி)

வளமுள்ள கிராமமாக்க வனப்புடன் சேவையாற்றி தான் வாழும் கிராமத்தில் இருபத்தியைந்து ஆண்டுகள் சிறந்த சேவை தனையாற்றி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற சேவையாளன். நேர்மை நியாயத்தை நிலை நிறுத்தி சேவைதனை ஆற்றியதால் பதவியுயர்வினைப் பெற்றுப் பணிபுரிந்து அகவை அறுபதில் ஓய்வு பெறும் ந.இராசகுமாரன் அவர்தம் குடும்பத்தினருடன் மனமகிழ்வும், நீண்ட ஆயுளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

Happy 60th Birthday!

இடைக்குறிச்சி, வரணி. (சீ-9134) வாழ்த்துவோர், ந.ஸ்ரீரங்கநாதன் குடும்பம்


## காலம், ஜீவநதி விமர்சன அரங்கு

யாழ். பொது நூலகத்தின் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் காலம் 50 ஆவது இதழ் மற்றும் ஜீவநதி 100 ஆவது இதழ் என்பனவற்றுக்கான விமர்சன அரங்கு அ.யேசுராசா தலைமையில் யாழ். பொதுநூலக குவிமாட கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும். (இ-10-102-51)


60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



22.07.2017

திரு. நடராசபிள்ளை இராசகுமாரன்

(நிர்வாக கிராம உத்தியோகத்தர், தென்மராட்சி)

அரும்பணிகள் பல ஆற்றி
நேர்மைக்கோர் உத்தமராய்
கடமைக்கோர் கண்ணியமாய்
முகாமைத்துவத்தில் முதன்மை பெற்று
நாற்பது ஆண்டு நற்பணியாற்றி
அகவை அறுபதில்
சேவையின் நிறைவைப் பெற்ற நிறைவுடன்
பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடும்
ந. இராசகுமாரன் அவர்கள் வாழ்வு
ஒளிமயமானதாக அமைய வேண்டி
வாழ்த்துகின்றோம்.

60Th ANNIVERSARY

Happy Birthday

இடைக்குறிச்சி, வரணி. (சீ-9134) வாழ்த்துவோர், மனைவி, பிள்ளைகள்



அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

**1. பதவி: கிளை முகாமையாளர் (208/15)**

**சம்பள அளவுத் திட்டம் : 13/2015 இன்படி** 13515-15815
110X10-120X10

கல்வித் தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியுடன் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:

1. மேற்படி பதவிகளிற்கான வயதெல்லை 18-45, சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருத்தமற்றது. எனினும் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.
2. சங்கத்தினூடாக கோரப்படும் பிணைப்பணம் செலுத்த வேண்டும்.
3. விண்ணப்பிக்க தகுதியானவர்கள் சங்கக் காரியாலயத்தில் 10/- செலுத்தி மாதிரி விண்ணப்பத்தை பெற்று பூரணப்படுத்தி கல்வி மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதியுடன் இணைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 12.08.2017**

பொது முகாமையாளர்
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்

(சீ-9130)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:19
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:CIMA/ கணக்காளர் லண்டன்
தொ.இ: B/7593

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 55 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BEd/ஆசிரியர்
தொ.இ: B/7594

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L பிரான்ஸ்
தொ.இ: B/7595

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 63 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/ அவுஸ்திரேலியா
தொ.இ: B/7596

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6704

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 13 செவ் 4 இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6706

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 26
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma ஆசிரியர்
தொ.இ: G/6707

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 42 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்
தொ.இ: G/6715

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொடரும் சட்டவிரோத கருங்கல் அகழ்வை தடுத்து நிறுத்த மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத கருங்கல் அகழ்வை தடுத்து நிறுத்தி பிரதேசத்தை வரட்சியிலிருந்து காப்பாற்ற முன்வருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

அதிகளவு ஆழத்திற்கு கருங்கல் அகழ்வு இடம்பெறுவதால் கிணறுகளில் நீர் இல்லாது போகிறது. அதேவேளை கருங்கல் அகழ்வு காரணமாக வெளியேறும் தூசுகளால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாளாந்தம் 100 டிப்பருக்கு மேல் இங்கிருந்து கருங்கல் வெளியில் கொண்டு செல்லப்படுகிறது. இந்த அபாயகரமான நிலையை நீக்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கருங்கல் அகழ்வின் காரணமாக காடழிப்பும் இடம்பெறுகிறது.

சட்டவிரோத மரக் கடத்தல், கிரவல் அகழ்வு, மணல் அகழ்வு என ஒட்டுசுட்டான் பிரதேச இயற்கை சமநிலையை குழப்பவே பல்வேறு சக்திகள் செயற்படுகின்றன. இவற்றுக்கு துணைபோகும் அதிகாரிகள் உடனடியாக இவற்றை நிறுத்தி எமது பிரதேசத்தை காப்பாற்ற முன்வர வேண்டுமெனமக்கள்மேலும்கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-281)

# அமைச்சர் சத்தியலிங்கம் தளபாடங்கள் வழங்கல்




(செட்டிகுளம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கத்தின் 2017 இற்கான வருடாந்த நிதியொதுக்கீட்டில் செட்டிகுளம் பிரிவிற்குட்பட்ட வீரபுரம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாடங்கள் (பிளாஸ்ரிக் கதிரைகள்) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வீரபுரம், மீள் எழுச்சி கட்டட மண்டபத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம் பெற்ற நிகழ்வின் போது தளபாடங்கள் வழங்கப்பட்டன. (இ-3)

# குடியேற்றக்காட்டுக்கு விசமிகள் தீ வைப்பு!

## கூழாமுறிப்பு பகுதியில் சம்பவம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாமுறிப்பு பகுதியில் குடியேற்றத்துக்கென தெரிவு செய்யப்பட்ட பகுதியில் உள்ள காடுகளுக்கு விசமிகளால் நேற்று முன்தினம் தீவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் காடுகளை அழித்து இடம்பெறவுள்ள குடியேற்றத்துக்கு எதிராக இளைஞர்கள் ஒன்றிணைந்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். "வனங்களை அழிக்காதே. வனங்களை அழிப்பதும் எம்மை அழிப்பதும் ஒன்று" என பல்வேறு கோசங்களோடு போராட்டத்தை நடத்தினர். இந்நிலையில் குறித்த காட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. (இ-3-281)

# குமுழமுனையில் நடமாடும் பொலிஸ் நிலையம் திறப்பு







முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை பிரதேசத்தில் மக்களுக்கான பொலிஸ் சேவைகள் கிராமத்திலேயே வழங்கும் நோக்கத்துடன் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைவாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அதிகாரியால் நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

குறிப்பாக இந்த பிரதேசத்தை அண்டியுள்ள கிராமங்களை சேர்ந்த 600இற்கு மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் போக்குவரத்து வசதிகள் குறைவான நிலையில் 15 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு சென்றே தமது தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

இந்நிலையில் மக்களுக்கான சேவைகளை இலகுபடுத்தும் நோக்கோடு இந்த நடமாடும் பொலிஸ் நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த பொலிஸ் நிலையத்தினூடாக டெங்கு ஒழிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்தல், மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்தோடு இன்றைய தினம் பிரதேச மக்களுக்காக மரக்கன்றுகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3-281)

# மின் இணைப்பு பயிற்சி நெறி

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மாணவர்களுக்கான மின்னிணைப்புதொழிற் பயிற்சியை வழங்குவதற்காக திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி (அதிகார சபையானது (VTA) NVQ Level III மட்டத்திலான வீட்டு மின் இணைப்புபயிற்சிநெறியுடன் ஆங்கில வகுப்பும் நடத்துகின்றது. இத் துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்களைபெற்று கொள்ள முடியும் என்பதுடன் இப் பயிற்சியானது முற்றிலும் இலவசமாகும். பயிற்சியின் முடிவில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இப் பயிற்சியை கற்க விரும்புபவர்கள் பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்க முடியுமென்பதை அறியத்தருவது




டன் இதற்கான பதிவுகளை 31.07.2017 ஆம் திகதி வரை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு போத னாசிரியர் க.கௌரி சங்கரின் 077 672 8973 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ-3)





பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய நாடுபூராகவும் உள்ள பொலிஸ் நிலையப் பகுதிகளில் மக்களின் குறைகளை அறிந்து தீர்வுகாணும் வகையில் நடமாடும் சேவைகள் நடத்தப்படவேண்டும் என்ற தீர்மானப்படி பூநகரி பொலிஸ் பிரிவின் பள்ளிக்குடா கிராம சேவையாளர் பகுதியில் முதலாவது நடமாடும் பொலிஸ் சேவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பள்ளிக்குடா பொதுநோக்கு மண்டபத்தில் பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் இடம்பெற்றது. மதகுருமாரின் ஆசியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பூநகரி கடற்படை பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இச்சேவை நிலையத்தில் மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்வதற்கும் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், திருமணப் பதிவு சம்பந்தமான ஆலோசனைகள் பற்றியும் அறிந்து கொள்ளவும் முடியும். மேலும் இச்சேவை இரவு- பகலாக ஒரு மாதத்திற்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)




வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்த 26 ஆம் அணிக்கான நிறைவு விழா கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (இ-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப்புனரமைப்பு ஆரம்பம்




(பனிக்கன்குளம்)

வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான குறித் தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து (PSDG) வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட 5 மில்லியன் ரூபாவில் வவுனியாவில் இளமருதங்குளம், சமளன்குளம் .வீதி புனரமைக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரனால் தெரிவு செய்யப்பட்ட குறித்த வீதியானது 450 மீற்றர் வரை 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் குறித்த பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றது. (இ-3-281)

# பரீட்சைகளுக்கான இலவச வகுப்புகள்

கிளிநொச்சியில் துளி நற்பணி மன்றத்தின் நிதி அனுசரணையில் வட மாகாண சபையின் அபிவிருத்தி அலுவலர், ஆசிரியர் தெரிவு, ஏனைய போட்டிப் பரீட்சைகளுக்கான இலவச வகுப்புக்கள் நடை பெறவுள் ளன.கிளிநொச்சி மாவட்ட கூட் டுறவு கலாசார மண்டபத்திற்கு அருகாமையிலுள்ள நிலையமொன்றில் இவ் வகுப்புக்கள் நடை பெறவுள்ளன.நாளை மறுதினம்24 ஆம்திகதி திங்கட்கிழமை, 26 ஆம் திகதி புதன்கிழமை, 27 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் பொது உளச்சார்பு, பொது அறிவு ஆகிய பாடங்களுக்கு அனுபவம், ஆற்றல் வாய்ந்த விரிவுரையாளர்களால் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு கற்பிக்கப்படவுள்ளது. வகுப்பு நடைபெறும் நிலையத்தில் 35 பேர் மட்டுமே கற்கக் கூடிய இடவசதி மட்டுமே காணப்படுவதால் முற்பதிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் இலவச வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர்- 0718584886 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக

# வீட்டுத்திட்டம் கோரி கவனயீர்ப்பு போராட்டம்





ஒட்டுசுட்டன் பிரதேச செயலர்பிரிவின் கீழ் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள் குடியேறிய பொதுமக்களில் இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காத மக்கள் தமக்கு இன்னமும் நிரந்தர வீடு வழங்கப்படவில்லை என்று தெரிவித்து நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இது தொடப்பில் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் ஏழு வருடங்களுக்கு மேலாக தற்காலிக விடுகளிலே வாழ்ந்து வருகின்றோம். இதனால் நாங்கள் உளரீதியாக பெரிதும் பாதிப்படைந்துள்ளோம். எமது இந்த நிலையை மாற்றி எமக்கு நிரந்தர வீடு பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும் இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தனன் கருத்து தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 800 குடும்பங்களுக்கு மேலாக நிரந்தர விடுகள் வழங்கப்படாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் ஒரேநேரத்தில் இவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

நிரந்தர வீடுகள் அற்றவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் வீடுகள் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் இந்த வருடம் 95 நிரந்தர வீடுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர் வரும் காலங்களிலும் இவ்வாறு தற்காலிக வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொதுமக்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன.அதன் அடிப்படையில் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இதேவேளை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மகஜர் ஒன்றை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-281)

# மின்தடை பற்றிய அறிவிப்பு

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 22.07. 2017 இன்று கலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் சாரையடி, கிராமக் கோடு, பருத்தித்துறை நகரம், V.M வீதி, கல்லூரி வீதி, தம்ப சிட்டி, சாளம்பை மருதனார் மடம், சுன்னாகம் பெரிய மத வடி, உடுவில், சங்குவேலி, மானிப்பாய், அரசடி, கட்டுடை, பிப்பிலி, இணுவில், உப்புமடம், தாவடி, மானிபபாய் வீதி, சுதுமலை, குளப்பிட்டி, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி, ஆணைக்கோட்டை சந்தி, யாழ்.வீதி மானிப்பாய், ஆறுகால் மடம், சுழிபுரம், ஆனைக்கோட்டை VC, நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென். பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, பள்ளத்தடி, சாவற்காட்டுச் சந்தி, வராகி அம்மன் கோவிலடி, கக்கை தீவு, கொக்குவில் சந்தி, சம்பியன் லேன், ஆடியபாதம் வீதி, மருத்துவபீட பிரதேசம், கோம்பயன், பூநாறிமடம், சிவப்பிரகாசம், தலையாழி, கே.கே. எஸ். வீதியில் (கொக்குவில் சந்தியில் இருந்து நாச்சிமார் கோவிலடி வரை), இராமநாதன் வீதியில் ஒரு பகுதி, காரைக்காடு சொர்ணவடலி, மணியர்பதி, மானிப்பாய் வீதியில் கோம்பயனிலிருந்து ஓட்டு மடம் சந்திவரை, இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, ஆஸ்பத்தரி வீதி, மார்டீன் வீதி சந்தியில் இருந்து ஏ-9 வீதி வரை, நல்லூர்க் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டுக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், வெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிரெட் (துளசி மஹால்), றியோ, றக்கா வீதி பிறிட்டீஸ் கவுன்சில், யு.எஸ். ஹோட்டல், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ்.மாவட்டச் செயலாளர் அலுவலகம், நாவர் வீதி, தியாகி அறக் கொடை நிலையம், பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச), மருதனார்மடம்,யாழ். நுண்கலைப் பீடம், பிராந்திய விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் அலுவலகம், சுன்னாகம் காகிள்ஸ் பி.எல்.சி, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பிரதேசம் ஆகிய இடங்களிலும் காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை வவுனியா பிரதே சத்தில் நெடுங்குளம், கருவேலப் புளியங்குளம், மலையா பருத்திக் குளம், அற்றம் பஸ் கொட, மாமடுவ, அலுத்வத்த, மகாகச்ச கொடிய, பிரப்பன்மடு, நந்திமித்ரகம, சலலிங்கம், நாமல் கம, எபாகஸ்வேவா, C.E.C கல்லுடைக்கும் ஆலை, மடுகந்த இலங்கை தொலைத் தொடர்பு கோபுரம், பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மேலும் காலை 9 மணியிலிருந்து முற்பகல் 10 மணிவரை மற்றும் 5 மணியிலிருந்து மாலை 6 மணி வரை வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து கண்டி வீதி ஊடாக கற்குண்டமடு வரை, மதவு வைத்த குளத்தில் இருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாரம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவ புளியங்குளம், பட்டாணி சூரிலிருந்து நெளுக்குளம்சந்தி வரை, சூமாங்குளத்திலிருந்து நொச்சிக் குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக் குளம் வரைக்கும், நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வெளிக்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, மடு கந்தவில் இருந்து துட்டுவாகை வரை, வவுனியா வைத்தியசாலை, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா காகிள்ஸ் பூட்சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்று முறிப்பு விமானப்படை முகாம், மண்டரின் காமென்ட்ஸ், Gowloom காமென்ட்ஸ், இரட்டைக் பெரிய குளம் இராணுவ முகாம், பூ ஓயா இராணுவ முகாம், S.V.R அரிசி ஆலை, ஓவியா விடுதி , லங்கா அரிசி ஆலை, குளோப் அரிசி ஆலை , கீர்த்தி அரசி ஆலை, குடாகச்ச கொடிய கல்லுடைக்கும் ஆலை, குருமன்காடு, U.N.H.C.R அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஶ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரசி ஆலை, சுயன் அரிசி ஆலை , அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர கிளிநொச்சிக்கு விஜயம்

## மாவட்ட நிலைமைகள் தொடர்பாக ராணுவ தலைமையகத்தில் ஆராய்வு




அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். நேற்று நண்பகல் கிளிநொச்சி விஜயம் மேற்கொண்ட அவர் இரணைமடு இராணுவ தலைமையகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் கேட்ட றிந்து கொண்டார். தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அமைச்சர், நாட்டில் நிலவிய கடும் வரட்சியான கால நிலையால் பாதிக்கப்பட்டவர்களிற்கு குடிநீர் உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (இ-3)

இந்துபுரம் திருமுறிகண்டி புனித பவுல் முன்பள்ளியின் 2017 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முன்தினம் ஆசிரியர்









குலபாக்கியம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளி உதவி பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, முறிகண்டி இந்து வித்தியாலய அதி பர் இ.பேரின்பநாதன், இந்துபுரம் கிராம சேவகர் கே.சண்முகராசா, [illegible] வெளிநாட்டு பிரதிநிதி செல்வி.மெரிண்டா மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் சின்னஞ்சிறு பிள்ளைகளின் தனி, குழு விளையாட்டுகள் பல இடம்பெற்றது. [illegible] நிகழ்ச்சி பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் நடைபெற்றது. (படங்கள்.லக்சிதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவிலில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மணமகனுக்கும் மீசாலையைச் சேர்ந்த மணமகளுக்கும் நேற்று தமிழர் பாரம்பரிய முறைப்படி திருமணம் இடம்பெற்றது. இதில் மணமகன் மணமகளை மாட்டு வண்டியில் அழைத்து வந்து கோவிலில் பாரம்பரிய முறைப்படி தாலி கட்டி திருமணம் முடித்தார். இத்திருமணத்தில் ஜேர்மன் நாட்டிலிருந்து வருகைதந்த மணமகனின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்: கிஷோர்)

# இலங்கையில் ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் புலனாய்வு நகர்வுகள் துல்லியமாக கண்காணிப்பு

## பாதுகாப்புத் தரப்பு திட்டவட்டம்

(கொழும்பு)

**இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நகர்வுகள் உள்ளதாகவும் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறையை உடனடியாக முன்னெச்சரிக்கையாக செயற்படுமாறும் அமெரிக்க பாதுகாப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு நகர்வுகள் துல்லியமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக இலங்கை பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.**

அமெரிக்க பாதுகாப்பு அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நகர்வுகள் உள்ளதாகவும் இலங்கையின் புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் படைகள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் தரப்பின் 2016 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை பாதுகாப்பு விடயத்தில் முப்படைகளின் செயற்பாடுகள் துல்லியமாக உள்ளதாகவும் புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருவதாகவும் இலங்கை பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் இதுவரையில் எந்தவித பயங்கரவாத நகர்வுகளும் இடம்பெறவில்லை எனவும் சர்வதேச நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் பயங்கரவாத செயற்பாடுகள் இலங்கையில் செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் பாதுகாப்புத் தரப்புடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும், கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக பாதுகாப்புக் கண்காணிப்புகள் இடம் பெறுவதாகவும். பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி கடந்த ஆண்டு குறிப்பிட்ட தகவலில் 36 இலங்கையர்கள் சிரியாவிற்கு சென்று ஐ.எஸ். பயங்கரவாத குழுவில் இணைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இலங்கையை சேர்ந்த நன்கு கற்ற 32 முஸ்லிம்கள் ஐ.எஸ். பயங்கரவாதக் குழுவில் இணைந்துள்ளனர் என்ற தகவலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

## அமைப்பாளர்களில் மீண்டும் மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களிடையே மீண்டும் ஒரு மாற்றம் ஏற்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தொகுதி அமைப்பாளர்களில் பலர் பெயரளவுக்கு மாத்திரமே இருக்கின்றனர். கட்சியின் முன்னேற்றம் பற்றி அவர்கள் எவ்வித அக்கறையும் காட்டாமல் காலம் கழித்து வருவதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதனால் அவ்வாறானவர்களை நீக்கி விட்டு புதியவர்களை நியமிக்கக் கட்சியின் உயர்பீடம் தீர்மானித்திருக்கின்றது என அவர் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி



திரு. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

தோற்றம் 01.08.1942

மறைவு 21.07.2017

எமது வித்தியாலய அதிபர்.திரு.கெ.அன்ரன் செல்லநாயகம் அவர்களின் அன்பு மாமனார் திரு.சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 21.07.2017 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் அதிபர் மற்றும் அவர் தம் குடும்ப உறவுகளுக்கும் எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை பிரார்த்திக்கிறோம்.


"பசும்புல் வெளி மீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்." - திருப்பாடல் 23:2

யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்,
ஆசிரியர் நலன்புரிக் கழகமும் ஊழியர்களும் (9881)


### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் பண்டத்தரிப்பு
### ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 06
உத்தேச ஆதன இல: 32/6
வீதி: நல்லுணி வீதி
கிராமசேவையாளர் பிரிவு: J/145, வடலியடைப்பு

வட்டாரம் 06, நல்லுணி வீதி, உத்தேச ஆதன இல 32/6 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்.மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கிறை "கரந்தன்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 1 குழி 11 1/2 கொண்ட இவ்வாதனம் நிற்சாமம் சங்கானையைச் சேர்ந்த ஆசை அழகரத்தினமும் பெண் மீனாட்சியும் அவர்களால் அவ்வூரைச் சேர்ந்த துரைராசா கவீந்திரராசா அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் ப.இராசகுரு அவர்கள் முகதாவில் நிறைவேறி 3626 இலக்க 16.11.2002 திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரி யப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு A. கமலசேகரம் அவர்களால் வரையப்பட்ட 7197ம் இலக்க 15.05.2017 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது "கரந்தன்" நிலப்பரப்பு 1 குழி 7.75 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக் குள் எழுத்து மூலம் அறியத் தரு மாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதன மானது துரைராசா கவீந்திரராசா எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.





(9879)

செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் பண்டத்தரிப்பு
### ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:-06
உத்தேச ஆதன இல:- 32/7A
வீதி:- நல்லுணி வீதி
கிராம சேவையாளர் பிரிவு:- J/145, வடலியடைப்பு.

வட்டாரம் 06, நல்லுணி வீதி, உத்தேச ஆதன இல. 32/7A இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறை J/145 கிராம சேவகர் பிரிவில் உள்ள "கரந்தன் நொச்சிக்கரந்தனும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 2 1/2 கொண்ட இவ்வாதனம் சங்கானையைச் சேர்ந்த சிவக்கொழுந்து மகள் விஜயரமணி அவர்களால் அவ்வூரைச் சேர்ந்த நேசதுரை ரகுநாதனுக்கும் பெண் ராகினியும் அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் சி.வீரகத்திப்பிள்ளை அவர்கள் முகதாவில் நிறைவேறிய 12393 இலக்க 21.05.2012 திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. A. கமலசேகரம் அவர்களால் வரையப்பட்ட 7196 ஆம் இலக்க 15.05.2017 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது "கரந்தன் நொச்சிக்கரந்தனும்" நிலப்பரப்பு 2 குழி 3 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது நேசதுரை ரகுநாதனுக்கும் பெண் ராகினியும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




(9879)

செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிற்காக போராடி உயிர்நீத்த தமிழருக்கும் நட்டஈடு வேண்டும்

## காணாமற் போனோர் ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

**இராணுவத்திற்கு வழங்குவது போன்று நாட்டிற்காக போராடி உயிர்நீத்த மக்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என காணாமல் போனோர் ஒன்றியத்தின் அங்கத்தவரான தாய் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.**



வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களால் கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"காணாமல் போனோர் அலுவலகத்தை உருவாக்குவதற்கான சட்டமூலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டுள்ளதாக அறியக் கிடைத்தது.

அதன்படி காணாமல் போனோர் அலுவலகம் திறக்கப்படுவது எமக்கு பெரிய விடயமல்ல. அதில் மக்கள் முன்வைத்த சில கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதையே நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தி நிற்கிறோம்.

அதேவேளை, காணாமல் போனவர்கள் மிக விரைவில் தேடி கண்டுபிடிக்கப்பட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# கோமாளியாக மாற விரும்பவில்லை

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

உமா ஓயா திட்டத்தை மூடுமாறு கூறி வீதிகளில் கோஷமிட்டால் தான் ஒரு கோமாளியாக மாறும் நிலைமை உருவாகும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நவீனமயப்படுத்தப்பட்ட பதுளை வார சந்தையை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தொரிவிக்கையில்,

இவ்வாறு செய்வதை விட ஆடைகளை களைந்து விட்டு வீதியில் நடந்து செல்வது சிறந்தது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உமா ஓயா சம்பந்தமாக பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நாங்கள் பிரச்சினையை கைவிட்டுள்ளதாக பெரும்பாலான மக்கள் நினைக்கின்றனர்.

நாங்கள் செய்யாத பாவத்தை தோளில் சுமக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பிறர் செய்த பாவத்தை நாங்கள் அனுபவித்து வருகின்றோம். மக்களிடம் திட்டு வாங்குவதும் நாங்கள். இது தான் அரசியல்.

நான் ஒரு அடிக்கல்லை கூட நடவில்லை. சுரங்கத்தை வெட்டுமாறும் கூறவில்லை. இதுபற்றி எதுவும் எனக்கு தெரியாது. ஆனால் மக்கள் என்னை திட்டுகின்றனர். உலகம் இப்படித்தான். ஒன்றும் செய்ய முடியாது.

நாங்கள் செய்ய வேண்டியதை அரசாங்கத்திற்குள் செய்து வருகிறோம் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோத உதிரிப்பாக நிலையம் சுற்றிவளைப்பு

சட்டவிரோதமாக வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்று பாணந்துறை வலான மத்திய ஊழல் மோசடி தடுப்பு பிரிவினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

பொத்துஹெர, தம்பெக்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மேற்படி சுற்றிவளைப்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று பொல்கஹவல நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாணந்துறை வலான மத்திய மோசடி தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கை நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை தியாகத் திறன் வேள்வி - 2017

## நாடகப் போட்டி பற்றிய இறுதி அறிவித்தல்

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் தியாகத் திறன் வேள்வி-2017 இல் நாடகப் போட்டியும் சேர்க்கப்படுகிறது. நம் காரைச் சமூகத்தின் சிந்தனைப் போக்கு, கலையுணர்வு, சமூக உறவு ஆகிய தளங்களில் புது இரத்தம் பாய்ச்சும் நோக்கிலேயே நாம் நாடகப் போட்டிகளை அறிமுகப்படுத்துகிறோம்.

காரை மண்ணில் மீண்டும் முத்தமிழாம் இயல் இசை நாடகத்தின் மறுமலர்ச்சி முதற் பரிசு ரூபாய் அறுபதாயிரம், இரண்டாம் பரிசு ரூபாய் நாற்பதாயிரம், மூன்றாம் பரிசு ரூபாய் பத்தாயிரம் அத்துடன் அறக்கொடை அரசு சுவிஸ் கதிர்காமநாதன் அவர்களது தந்தையார் அமரர் கதிரவேலு சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்த சுழற்கேடயம்.

கலைக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், நூல் நிலையங்கள், கோயில் சார்ந்த நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள் (உதாரணம்:-கமத்தொழிற் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம்), விளையாட்டுக் கழகங்கள் போன்ற சமூக நிறுவனங்கள், அரச நிறுவனங்களின் ஊழியர் ஒன்றியங்கள் (உதாரணம்:-வங்கி ஊழியர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்கள்), குறிச்சி வாரியான குழுக்கள் எனக் காரைநகரின் பரந்துபட்ட மக்களும் கலந்து கொள்ளலாம். நாடகப் போட்டி பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்படுகிறது.

எனினும் அதிபரின் அனுமதியுடன் மாணவர்களும் பங்கு பற்றலாம். ஓரங்க நாடகத்தையும் நாட்டிய நாடகத்தையும் தவிர ஏனைய நாடக வடிவங்கள் போட்டியில் ஏற்றுக் கொள்ளப்படும்.

வசனங்கள் தூய தமிழில் இடம்பெற வேண்டும். அவசியமான இடங்களில் நாடகத்தின் கருப்பொருள் தொடர்பான அவசியம் ஏற்படின் குறைந்த அளவு பிறமொழிக் கலப்பு இருக்கலாம். தேவையற்ற இடங்களில் பிறமொழிக் கலப்பு இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும். நாடகத்தின் கருப்பொருள் ஏதோ ஒரு வகையில் காரை மண்ணின் சமூக உறவு, கலை, கல்வி, பொருளாதாரம், பண்பாடு என்பவற்றின் விருத்தியை நோக்கி அமைய வேண்டும்.

போட்டிகள் ஆங்கில புரட்டாதி மாதம் இடம்பெறும். சரியான திகதிகள் 01.09.2017 இற்கு முன்பதாக அறிவிக்கப்படும். மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் swisskarai 2004 @ gmil.com அல்லது தொலைபேசி-0094-770 452475 விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி 31.07.2017 விதிகள் அடங்கிய அறிவித்தலையும் விண்ணப்பப் படிவத்தையும் காரை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காரை சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் கலை வளர்ச்சியிலும்அக்கறைகொண்ட தனிநபர்கள் அரச மற்றும் அரசு சாரா சமூக மேம்பாட்டு நிறுவனங்களும்சமூகக் குழுக்களும் எமது நாடகப் போட்டியில் பெருமளவில் கலந்து கொண்டு காரை நகர் மறுமலர்ச்சியில் பங்காளிகளாகும் வண்ணம் வேண்டுகிறோம்.

"ஆளுயர்வே ஊருயர்வு"

கலாநிதி கென்னடி விஜயரட்ணம்
இணைப்பாளர், மொழி, கல்வி, கலை மேம்பாட்டுக் குழு
சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை.

# காற்றால் தூக்கி வீசப்பட்டது கடற்கரை கட்டடக் கூரை



யாழ். வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் உல்லாசக் கடற்கரையில் அமைக்கப்பட்ட கட்டடத்தின் கூரை காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது.

மேற்படி கடற்கரையினை அண்டிய பகுதியினை உல்லாசக் கடற்கரையாக மாற்றி அங்கு கட்டடம், இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பருத்தித்துறைப் பிரதேச சபையினரால் இவை அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கட்டடத்தின் கூரை காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது. கட்டடக் கூரை காற்றால் ஒரு மாதம் கடந்த நிலையிலும் இதுவரை மீண்டும் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# சிரமதானப்பணியும் புனரமைப்புப் பணியும்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வாரியப்பு மடம் கரவெட்டி கிழக்கு மக்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு இன்று சனிக்கிழமை சிரமதானப் பணியும் தொடர்ந்து புனரமைப்புப் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளதாக செல்வச் சந்நிதி ஆலய வாரியப்பு மடத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-10-108)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# படுகொலையை கண்டித்து நெடுஞ்சாலையில் மறியல்


(லக்னோ)

உத்தரபிரதேச மாநிலம் பால்ரம்பூர் மாவட்டத்தில் நடந்த படுகொலையை கண்டித்து பொதுமக்கள் நெடுஞ்சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பெருமளவில் பாதிக்கப்பட்டது.

உத்தரபிரதேச மாநிலம் பால்ரம்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு துர்கேஷ் சிங் என்பவரை அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் படுகாயம் அடைந்த துர்கேஷ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவர் தனது நண்பர்களை சந்தித்து விட்டு வீடு திரும்பும் போது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.


இப்படுகொலைக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டி அப்பகுதி மக்கள் தேசிய நெடுஞ்சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நான்கு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

போராட்டத்தை அடுத்து இறந்த துர்கேஷ் சிங்கின் தந்தை கொடுத்த புகாரின் அடிப்படையில் கொலையாளி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (3-8)



ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளதை குறிக்கும் வ
ராம்நாத் கோவிந்தின் மணல் சிற்பத்தை சுதர்சன் பட்நாயக் வரைந்து வைத்

## ரூ. 11.57 கோடிக்கு ஏலம் போனது
### சந்திரனிலிருந்து எடுத்து வந்த மண்துகள்கள்



(நியூயோர்க்)

சந்திரனுக்கு முதல் முறையாக நீல் ஆம்ஸ்ட்ரோங், புஷ் ஆல்டிரின் ஆகியோர் சென்றனர். நாசாவின் அப்பல்லோ- 2 விண்கலம் மூலம் கடந்த 48 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முறையாக இவர்கள் சந்திரனுக்கு சென்று வந்தனர். அப்போது சந்திரனில் முதன் முதலாக காலடி எடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங் ஆய்வுக்காக அங்கிருந்து மண், பாறைகளை சேகரித்து அவற்றை ஒரு பையில் எடுத்து வந்தார். அதில் 500 கிராம் மண், 12 பாறை படிவங்கள் போன்றவை இருந்தன. சந்திரனில் 5 பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட இந்த மண் மற்றும் பாறைகள் நினைவுச்சின்னங்களாக கருதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே சந்திரனில் இருந்து மண் எடுத்து வரப்பட்ட சிறிய பை 11 கோடியே 57 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டுள்ளது. நியூயோர்க்கில் உள்ள சோத்பீ மையத்தில் அந்த பை ஏலம் விடப்பட்டது. நினைவுச் சின்னமாக கருதப்படும் அந்த பையில் சந்திரனில் எடுத்த மண் துகள்கள் உள்ளதால் ஏலம் விடப்பட்டது.

இந்திய மதிப் பின் படி 11 கோடியே 57 இலட்சம் ரூபாய்க்கு இந்தப் பை ஏலம் போன தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த பை ரூ.25 கோடிக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-8)

# வடிவேலு பாணியில் அரசை விமர்சிக்கிறார்கள்
## அமைச்சர் செல்லூர் ராஜூ பேட்டி

(மதுரை)

ஜெயலலிதா இல்லாததால், வடிவேலு பாணியில் அ.தி.மு.க. அரசை எல்லோரும் விமர்சிக்கிறார்கள் என்று அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்துள்ளார்.

மதுரையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது,

தமிழக மக்கள் சினிமாத் துறையை பொறுத்தவரை எப்போதுமே புரட்சித் தலைவர் எம்.ஜி ஆரையும், புரட்சித்தலைவி அம்மாவையும் தான் நேசித்தனர். அரசியலிலும் ஏற்றுக் கொண்டனர். வேறு எந்த நடிகர்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இது கமல்ஹாசனுக்கும் பொருந்தும்.

மக்கள் தான் எஜமானர்கள். அவர்கள் நினைத்தால் தான் ஆட்சியில் இருக்க முடியும். அதனால் தான் நாங்கள் மக்களை சந்தித்து பிரச்சினைகளை தீர்த்து வருகிறோம்.

கமல்ஹாசன் சிறந்த நடிகர். மக்களிடம் மதிப்பை பெற்றவர். அவர் பொதுவாக அரசை விமர்சிக்கக்கூடாது. இந்த துறையில் குறை உள்ளது என கூறினால் அதை சரி செய்ய தயாராக உள்ளோம்.

அரசின் அனைத்து துறைகளும் வெளிப்படை யாக உள்ளன. ஆனால் கமல்ஹாசன் தேவையில்லாத பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறார். எங்கள் சிறந்த ஆளுமையான ஜெயலலிதா மறைந்து விட்டார். அந்த ஆளுமை இல்லாததால் நடிகர் வடி வேலு பாணியில் எல்லோரும் அரசை விமர்சிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார். ஆனால் எப்படியாவது முதலமைச்சர் ஆக வேண்டும் என்று கனவு காணும் மு.க. ஸ்டாலின் அரசின் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார். மக்கள் மன்றத்தில் புலி போல பேசும் மு.க. ஸ்டாலின் சட்டசபைக்கு வந்தால் எலி போல பதுங்கி விடுகிறார் என்று அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார். (3-8)

# கடலில் மூ... சரக்கு க...
## 11 ஊழியர்களு...

(அந்தமான்)

அந்தமான் திகிலிபூரில் இருந்து 100 கடல் மைல் தூரத்தில் 11 ஊழியர்களுடன் சரக்கு கப்பல் கடலில் மூழ்கியது.

அந்தமானில் இருந்து கொல்கத்தா நோக்கி சரக்கு கப்பல் 'ஐ.டி.டி. பாந்தர்' நேற்று முன்தினம் வந்து கொண்டிருந்தது.

அக் கப்பலில் 29 கன்டெய்னர்கள் 200 தொன் இரும்பு, 500 தொன் மணல் மற்றும் கார்கள் உள்ளிட்டவை இருந்தன.

# அமெரிக்காவில் சொத்துக்களை வாங்கும் இந்தியர்கள்

(நியூயோர்க்)


அமெரிக்காவில் ரியல் எஸ்டேட் துறையில் முதலீடு செய்பவர்களில் இந்தியர்களே அதிகம் என ஆய்வில் தெரியவந்துள்ளது. இது குறித்த ஆய்வு முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி அமெரிக்காவில் ரியல் எஸ்டேட்டில் அதிகம் முதலீடு செய்பவர்களில் இந்தியர்கள் 5 வது இடத்தில் உள்ளனர். கடந்த 12 மாதங்களில் அமெரிக்காவில் வீடுகள் வாங்குவதில் இந்தியர்கள் 7.8 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளனர். மேலும் 31.7 பில்லியன் டொலர்களை முதலீடு செய்து சீனர்கள் முதலிடத்தில் உள்ளனர். மேலும் கனடா, பிரிட்டன், மெக்சிகன் மற்றும் இந்தியர்களே அமெரிக்காவில் அதிக சொத்துக்களை வாங்குபவர்களாக உள்ளனர்.

இதேபோல் இந்தியர்கள் 2015 ஏப்ரல் முதல் 2016 மார்ச் மாதம் வரை 6.1 பில்லியன் டொலர்களை சொத்துக்களை வாங்க செலவிட்டுள்ளனர். அமெரிக்காவில் இந்தியர்கள் வாங்கும் சொத்துக்கள் மற்றும் அதற்காக முதலீடு செய்யப்படும் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

சொத்துக்களை வாங்கும் சீனா, இந்தியா மற்றும் மெக்சிகோ நாட்டினர் அமெரிக்காவிலேயே வசிக்கின்றனர் என்றும் கனடா மற்றும் பிரிட்டன் நாட்டினர் அங்கு வசிக்காதவர்களாகவும் உள்ளனர் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

# இந்திய - சீன மோதலை கவனித்து வரும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

இந்தியா - சீனா இடையே எல்லை பிரச்சினை தொடர்பாக நடைபெற்றுவரும் மோதல்களை நெருக்கமாகவும், உன்னிப்பாகவும் கவனித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிக்கிம் எல்லை அருகே இந்தியா-சீனா-பூடான் நாடுகள் சந்திக்கும் முச்சந்திப்பான டோகாலா பகுதியில் சீன இராணுவத்தின் ஆக்கிரமிப்பு செயற்பாட்டை இந்திய இராணுவம் தடுத்துள்ளது. இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளுக்கு ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு இந்திய இராணுவம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டுள்ளதால், சிக்கிம் எல்லையில் இரு நாடுகளும் படைகளை குவித்து உள்ளன. இந்நிலையில், இந்தியா-சீனா இடையே எல்லை பிரச்சினை தொடர்பாக நிலவிவரும் மோதல் போக்கை உன்னிப்பாக கவனித்து வருவதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹீத்தர் நாவெர்ட், 'எல்லைப்பகுதியில் நிலவிவரும் பதற்றத்தை தணிக்கும் வகையில் இரு நாடுகளும் சமாதான பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும்.

அதற்கு இடமளிக்கும்வகையில் இருதரப்பினரும் தங்கள் இராணுவத்தை திரும்பப் பெற்றால் மட்டுமே சமாதான பேச்சுவார்த்தை நடத்த முடியும். பீஜிங் நகரில் வரும் 27-28 ஆம் திகதிகளில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க செல்லும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு துறை ஆலோசகர் சீனாவின் பாதுகாப்பு துறை ஆலோசகருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்' என தெரிவித்துள்ளார். (3-8)

# மொசூலில் ஐ.எ... கடத்தப்பட்ட இ...

(டில்லி)

ஈராக் உள்நாட்டு போரால் மொசூல் நகரில் கடத்தப்பட்ட 39 இந்தியர்களை பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை என ஈராக் நாட்டு தூதர் தெரிவித்துள்ளார்.

ஈராக் நாட்டுக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு வைத்தியசாலை கட்டுமானப் பணிக்காகச் சென்ற இந்தியத் தொழிலாளர்கள் 39 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அவர்கள் எங்கிருக்கின்றனர் என்பது குறித்து உறுதியாக தெரியாமல் இருந்துவந்தது. இதுதொடர்பாக கருத்து தெரிவித்த

# 2016 இல் 10 இ... எயிட்ஸ் நோய்...
## ஐ.நா. அறிக்கை

(வோஷிங்டன்)

ஐ.நா. சபை எடுத்த கணக்கெடுப்பில் 2016ஆம் ஆண்டில் எயிட்ஸ் நோயால் உலகம் முழுவதும் 10 இலட்சம் பேர் இறந்ததாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஐ.நா. சபை ஆண்டு தோறும் எயிட்ஸ் நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்து அறிக்கை வெளியிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு






...த குறிக்கும் வகையில், ஒடிசா கடற்கரையில் ...ரைந்து வைத்துள்ளார்.

# தொடரும் ஆர்ப்பாட்டங்கள்
## வெனிசுலா அரசு நெருக்கடிக்குள்

(கராகஸ்)

புதிய அரசியலமைப்பு சட்டமன்ற தேர்தலை இரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வெனிசுலாவில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் மில்லியன் கணக்கானோர் இணைந்துள்ளனர்.

புதிய அரசியலமைப்பு சட்டமன்ற தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ள வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையில் கடந்த சில மாதங்களாக நாட்டில் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் தலைநகர் கராகஸில் நேற்று முன்தினமும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக் கும் இடையில் மோதல் ஏற்பட்டது. நேற்று முன்தினம் மாத்திரம் குறைந்தது மூன்று ஆர்ப்பாட்டக்காரர்கள் உயிரிழந்துள்ளதுடன்



300க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் தலைவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற ஜனாதிபதி மடுரோவின் உத்தரவின் பிரகாரம் மேற்படி கைது இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெனிசுலாவில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் எதிர்த்தரப்பு ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் நாடெங்கிலும் சுமார் 100 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். அதுமட்டுமன்றி ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தும் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

பரவலான உணவு மற்றும் மருத்துவ பற்றாக்குறைகளுக்கு இடையில் பணவீக்கம் ஏற்பட்டுள்ளமை அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# ...ல மூழ்கிய ...ந் கப்பல்
## ...ர்களும் மீட்பு

இக் கப்பல் வடக்கு அந்தமான் தீவு அருகே 120 நாட்டிகல் மைல் தொலைவில் மோசமான தட்பவெப்பம் காரணமாக நேற்று முன்தினம் காலை திடீரென கடலில் மூழ்கியது. இது பற்றி தகவல் அறிந்த கடலோர காவற்படையினர் 3 விமானங்களில் அங்கு மீட்புப் பணிக்கு சென்றனர்.

அப்போது கப்பலில் இருந்த சிறிய ரக படகில் ஏறி தப்பிய 11 ஊழியர்கள் கடலில் தத்த...டி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர். அவர்களை கடலோர காவற்படையினர் உயிருடன் மீட்டனர். (3-8)

# வடகொரியாவை பேச அழைக்கிறது தென்கொரியா




(சியோல்)

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை எளிதாக்க வேண்டுமாயின் வடகொரியாவுடனான பேச்சுவார்த்தையை வலுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள தென்கொரியா பேச்சுவார்த்தைக்கான தமது கோரிக்கைக்கு வடகொரியா பதிலளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தென்கொரிய பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மூன்-சாங்-க்யூன் நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது, கொரிய தீபகற்பத்தின் அமைதிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் இராணுவப் பகுதியில் பேச்சுவார்த்தை மீள நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் தெற்கு மற்றும் வடக்குக்கு இடையில் இராணுவ பதற்றங்களை எளிதாக்குவதற்கு பேச்சுவார்த்தை மிகவும் அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை தொடர்ச்சியாக மீறிவரும் வடகொரியா சர்வதேச நாடுகளுக்கு அச்சுறுத்தலாகவே விளங்குகின்றது. அதற்கேற்ப மிக நீண்டதூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்ட கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையொன்றை இம்மாத ஆரம்பத்தில் வடகொரியா வெற்றிகரமாக சோதனையிட்டமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# சீனாவில் வெடிவிபத்து
## 2 பேர் பலி, 55 பேர் காயம்




(பீஜிங்)

சீனாவில்உள்ள ஹாங்சோ நகரில் மக்கள் நெருக்கடி மிகுந்த வீதியில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 55 பேர் படுகாயம் அடைந்த னர்.

சீனாவில்உள்ள ஹாங்சோ நகரில் மக்கள் நெருக்கடி மிகுந்த வீதியிலுள்ள கடை ஒன்றில் நேற்றுக்காலை திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலு, 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து தகவலறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

காயம் அடைந்துள்ளவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெடி விபத்து எப்படி ஏற்பட்டது என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3-8)

# ...ஐ.எஸ்ஸினரால் ...ட இந்தியர்கள்

வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பதூஷ் நகரில் உள்ள சிறைச்சாலையில், ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இந்தியர்கள் 39 பேரும் சிறை வைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்தியாவுக்கான ஈராக் நாட்டு தூதர் பக்ரி அல் இசா டில்லியில் நிருபர்களிடம் தெரிவிக்கையில், மொசூல் நகரில் கடத்தப்பட்ட 39 இந்தியர்களின் நிலைமை குறித்து இதுவரை எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை என தெரிவித்தார். (3-8)

# தலைக்கவசம் அணிந்து பாடம் எடுக்கும் ஆசிரியர்கள்
## தெலுங்கானாவில் விநோதம்



(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம் மேடக் மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு பாடசாலையில், பழுதான மேற்கூரையை சரிசெய்யாததை கண்டித்து, ஆசிரியர்கள் தலைக்கவசம் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

தெலுங்கானா மாநிலத்தின் மேடக் மாவட்டத்திலுள்ள அரசு பாடசாலைஒன்றில்சுமார் 664 மாணவர்கள் படித்து வருகின்றனர். பாடசாலையின் பல்வேறு இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் பாடசாலையில் நடந்த விபத்தில், பாடம் எடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர் மீது மேற்கூரையில் இருந்து ஓடுகள் விழுந்ததில் காயமடைந்தார்.

இதைத்தொடர்ந்து, பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் தொடர்ந்து புகார் அளித்தனர். ஆனால், நிர்வாகம் அவர்களின் எந்த கோரிக்கையையும் காது கொடுத்து கேட்கவில்லை. இதையடுத்து, பாடசாலை நிர்வாகத்தை கவரும் விதமாக போராட்டத்தில் ஈடுபட ஆசிரியர்கள் முடிவு செய்தனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள், தங்கள் வகுப்புகளில் தலைக்கவசம் கொண்டு வந்திருந்தனர். பிரார்த்தனை முடிந்து வகுப்புகள் தொடங்கின. அப்போது ஆசிரியர்கள் தலைக்கவசம் அணிந்து கொண்டு, மாண வர்களுக்கு பாடம் நடத்தினர்.

இதுதொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றன.

இதுதொடர்பாக, மாவட்ட கல்வி அதிகாரி தெரிவிக்கையில், "விரைவில் இந்த பாடசாலைக்கு வருகை தரவுள்ளோம். அப்போது பாடசாலை நிர்வாகத்திடம் முறையான விசாரணை நடத்தப்படும். மேலும், மாண வர்களுக்கு தேவையான வசதிகளை விரைவில் செய்து தருவோம்" என தெரிவித் துள்ளார்.

பாடசாலை நிர்வாகத்தை கவரும் வகையில் நூதன முறையில் போராடிய ஆசிரியர்களுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது பாராட்டுதல்களை தெரிவித்து வருகின்றனர். (3-8)

# துருக்கியில் நில நடுக்கம்
## இருவர் உயிரிழப்பு – 200 பேர் காயம்

(அங்காரா)

துருக்கியில் நேற்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் இருவர் உயிரிழந்ததுடன், 200இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

6.7 ரிக்டர் அளவில் பதிவான குறித்த நிலநடுக்கமானது ஏஜியன் கடலில் சுமார் 11 கிலோமீற்றர் தூரத்தில், 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதிகாலை ஏற்பட்ட திடீர் நிலநடுக்கத்தால் அப்பகுதியில் இருந்த கட்டடங்கள் இடிந்து விழுந்த நிலையில், தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இதுவரை இருவரது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள அதேவேளை, காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துருக்கியிலும், கிரேக்கத்திலும் அடிக்கடி நிலநடுக்கம் உணரப்பட்டு வருகின்றது. இந்நிலையில் கடந்த 1999ஆம் ஆண்டு இடம்பெற்ற நிலநடுக்கத்தில் சுமார் 17 ஆயிரம் பேர்வரை உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# ...0 இலட்சம் பேர் ...நோய்க்கு பலி!

வருகிறது. அதன்படி சென்ற வருடம் எயிட்ஸ் நோயால் 10 இலட்சம் பேர் உயிரிழந்த தாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இது 2005ஆம் ஆண்டின் பலி எண்ணிக்கையில் பாதி ஆகும்.

மேலும் எயிட்ஸ் நோயால் இறப்பவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் நோயால்பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் நாசகாரி கொழும்பில்



பாரிய உலங்கு வானூர்தி தாங்கி நாசகாரி கப்பல் உள்ளிட்ட ஜப்பானிய கடற்படையின் இரண்டு போர்க் கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ஜப்பானிய கடற்படையின் 248 மீற்றர் நீளம் கொண்ட இசுமோஎன்றஉலங்குவானூர்தி தாங்கி நாசகாரி கப்பலும் 151 மீற்றர் நீளம் கொண்ட சசனாமி என்ற போர்க்கப்பலுமே கொழும்பு வந்துள்ளன.

இசுமோ என்ற உலங்கு வானூர்தி தாங்கி நாசகாரி கப்பலில் 970 கடற்படையினரும் சசனாமி என்ற போர்க்கப்பலில் 175 கடற் படையினரும் பணியாற்றுகின்றனர்.



இந்திய- அமெரிக்க கடற்படைகளுடனான மலபார் கூட்டுப் பயிற்சிக்காக வங்காள விரிகுடாவுக்கு வந்திருந்த இந்தக் கப்பல்கள் மூன்று நாட்கள் பயணமாக இலங்கை வந்துள்ளன.

நாளை 23ஆம் திகதி வரை கொழும்பில் தரித்திருக்கும் இந்தக் கப்பல்களில் உள்ள ஜப்பானிய கடற்படையினர். இலங்கை கடற்படையினருடன்இணைந்துமனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த மீட்பு பயிற்சிகள் உள்ளிட்ட கூட்டு பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகளிலும் ஈடுபடவுள்ளனர்.

இசுமோ என்ற உலங்கு வானூர்தி தாங்கி நாசகாரி கப்புல், 9 உலங்கு வானூர்திகள் நிரந்தரமாகத் தரித்து நிற்கும் வசதிகளைக் கொண்டன. அதேவேளை அதிகபட்சமாக 28 உலங்குவானூர்திகளை நிறுத்தும் வசதிகள் இதில் உள்ளன. இந்தக் கப்பல் இலங்கைக்கு இரண்டாவது முறை பயணம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலவச மருத்துவம் எனும் சொல்லுக்குரிய அர்த்தத்தை வழங்கியது நல்லாட்சியே

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்

(கொழும்பு)

மருத்துவத் துறையின் அனைத்து சேவைகளையும் இலவசமாக வழங்கி இலவச மருத்துவம் எனும் சொல்லுக்குரிய சரியான அர்த்தத்தை வழங்கியது நல்லாட்சி அரசாங்கமே என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அபிவிருத்தி செய்யப்பட்ட கல்கமுவ தள வைத்தியசாலையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

JAICA நிறுவனம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் 900 மில்லியன் ரூபாவிற்கும் அதிக நிதி ஒதுக்கீட்டில் 2013 ஆம் ஆண்டில் இச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, இயன் மருத்துவப் பிரிவு, தாய்-சேய் பராமரிப்பு நிலையம், சிறுவர் சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதி, மகப்பேறு மற்றும் சகல வசதிகளும் கொண்ட இரசாயன ஆய்வுகூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக இந்த வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் அத்தியாவசிய தேவையான புதிய நீர்வழங்கல் கட்டமைப்பிற்காக 20 மில்லியன் ரூபா நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி 2015 ஜனவரி 8 ஆம் திகதி இந்நாட்டு மக்கள் தன்மீது வைத்த நம்பிக்கைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இலங்கையை உலகில் தலைசிறந்ததொரு நாடாக கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கட்டுப்படுத்த முடியாத இயற்கை அனர்த்தங்கள் காரணமாக நாட்டின் உற்பத்தி செயல்முறையில் பாரிய நிவாரணங்களை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களினால் நெல் உற்பத்தி மற்றும் மரக்கறி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை அரசியல் ரீதியான பிரச்சினையாக சுட்டிக் காட்டுவதற்கு அரசுக்கெதிராக செயற்படுபவர்கள் முற்படுகின்றமை இப்போது மட்டும் இடம்பெறும் விடயமல்ல என்றும் தெரிவித்தார்.

இலவச மருத்துவத்தை பலப்படுத்தி அதன் உயரிய நன்மைகளை மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி டெங்கு பிரச்சினை போன்ற நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் தங்களது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தி செய்யப்பட்ட வைத்தியசாலையை மக்களிடம் கையளித்த ஜனாதிபதி அதனை பார்வையிட்டதுடன், சிறுவர் வாட்டுத் தொகுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

அபிவிருத்தி செய்யப்பட்ட கல்கமுவ தள வைத்திய சாலை போதைப்பொருள் ஒழிப்புக்கு அர்ப்பணிக்கப்பட்ட வைத்தியசாலையாகும் என்றும் ஜனாதிபதியினால் இதன்போது பிரகடனம் செய்யப்பட்டது.

இலத்திரனியல் சுகாதார தரவுத்தொகுதியையும் ஜனாதிபதி இதன்போது திறந்து வைத்ததுடன், நோயாளியையும் பதிவு செய்தார். (இ-11)

# இலங்கை மீனவர்களுக்கு விரைவில் டப் கணனி

(கொழும்பு)

மீன்பிடித்தல் தொடர்பான தகவலை பதிவு செய்ய இழுவைப் படகுகளுக்காக டப் கணனிகளை பெற்றுக் கொடுக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இழுவைப் படகுகளுக்காக இரண்டாயிரத்து 238 டப் கணனிகள் பெற்றுக் கொடுக்கப்படும். அதற்கு பயன்படுத்தப்படும் மென்பொருளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தயாரித்துள்ளது. இந்த மென்பொருள் பயன்பாடு மற்றும் டப் கணனிகளை பயன்படுத்துவது குறித்து மீனவ சமூகத்திற்கு பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பகுதியில் மீன் வளத்தை பெற்றுக் கொள்ளும்போது சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய ஒவ்வொரு இழுவைப் படகு ஊடாகவும் பிடிக்கப்படும் மீன்கள் தொடர்பான தரவுகளை கணனியில் பதிவு செய்ய வேண்டும். அதே நேரம் அந்த சகல தரவுகளையும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடல் வளம் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படத் தவறியமை காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது மீன் ஏற்றுமதித் தடையை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நினைப்பில் ஆழம் இல்லாதவர்கள்

உங்க வீட்டுக் கல்யாணத்திற்கு வரணும்னுதான் நினைச்சேன், ஆனால் முடியாமல் போயிடுச்சி.

நேற்றைக்கே அந்த வேலையை முடிக்கணும்னு திட்டம் போட்டேன். நடக்கலை.

6.00 மணிக்கே புறப்படணும்னு நினைச்சேன், எங்கே முடியுது. அவரை போய் பார்க்கணும்னு பார்க்கிறேன், நேரமே இல்லை.

இப்படிப் பல ரகமாகப் பேசுகிறவர்களைப் பார்க்கிறோம். ஏன் – நாமே சொல்கிறோம்.

இந்த மேற்கூறிய கூற்றுகளையெல்லாம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து, ஒவ்வொருவர் சூழ்நிலையையும் சேர்த்துப் பார்த்தோமானால் நினைப்பில் ஆழமும் அழுத்தமும் இல்லாதவர்கள் சொல்லும் சாக்குப் போக்குகள் இவை என்பது வெட்டவெளிச்சமாகிவிடும். வேறு விதமாகச் சொல்ல வேண்டும் என்றால் இவர்கள் மற்றவர்களை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

நமக்கு ஆர்வம் மட்டும் ஏற்பட்டு விடட்டும். எப்படியாவது அந்தத் திருமணத்தில் கலந்து கொள்வோமோ? மாட்டோமோ? அந்த வேலை கைமேல் பலன் தரட்டும். முடிப்போமா, மாட்டோமா? 6.00 மணிக்கு போகாவிட்டால் பெரிய நட்டம் வரும் என்பது தெரியட்டும். சரியான நேரத்திற்குப் புறப்படுவோமா? மாட்டோமா? அவரைப் போய்ப் பார்க்காவிட்டால் நம்மைக் குடியிருக்க விடமாட்டார் என்கிற நிலை உருவாகட்டும். பார்க்காமல் விட்டு விடுவோமா, மாட்டோம்.

ஆக, ஏதோ ஒரு நன்மையை எதிர்பார்த்தோ ஒரு பிரியத்தின் அடிப்படையிலோ அல்லது பயத்தின் அடிப்படையிலோ அல்லது மன மகிழ்ச்சிக்காகவோ இறங்குகிற வகைக் கட்டாயங்கள் எதுவுமே இல்லை என்றால் சுவாரசியம் குறைந்து சாக்குப் போக்குகளைத் தேடி ஓடி ஒளிகிறோம்.

நமக்கு உண்மையான ஆர்வம் மட்டும் உருவாகிவிட்டால் உயிரையே பணயம் வைக்கத் தயாராகி விடுகிறோம். எத்தகைய இடர்பாடுகளையும் சவால்களையும் எதிர்கொள்ள ஆயத்தமாகிவிடுகிறோம். கரன்ஸிகளைக் காகிதமாகக் கருதி, கண்டபடி செலவழிக்கிறோம். அலைகிறோம். தவிக்கிறோம். கிடந்து போராடுகிறோம்.

ஆக, இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது.

எதைச் சாதிக்க நினைத்தாலும் எந்தக் காரியத்தை ஆற்ற நினைத்தாலும் அதில் ஆழமும் அழுத்தமும் அவசியம். இந்த மனப்போக்கு வந்துவிட்டால் சாக்குப் போக்குச் சொல்லவே மாட்டோம்.

இந்த ஆழமான நினைப்பை நமக்கு நாமே செயற்கையான முறையில் கூட நம் மனத்திற்குள் உருவாக்கிக் கொ்ள்ளலாம். தவறில்லை.

நினைப்பில் மட்டும் அழுத்தம் இருந்துவிட்டால் சாதனையாளர்களின் பட்டியலில் நம் பெயர் இடம்பெறப்போவது உறுதி.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# ‘தசநாயக்க குற்றமற்றவர் என்பதை நீதிமன்றில் நேரில் தெரிவிக்கவும்’

## விமலுக்கு அமைச்சர் கிரியெல்ல பதிலடி



கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க குற்றமற்றவர் என, விமல் வீரவன்ச ஊடகங்களில் தெரிவித்துக்கொண்டு இருக்காமல் நேரடியாக நீதிமன்றத்துக்குச் சென்று தெரிவிக்குமாறு, உயர்க்கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 தமிழர்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என விமல் வீரவன்ச தெரிவிக்கின்றார்.

அதில் எந்தவொரு உண்மையும் இல்லை. அந்தத் தமிழர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் எந்தவொரு குற்றமும் இழைக்காதவர்கள் என அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஸ்ரீ.சுதந்திரக்கட்சியிலிருந்து எவரும் வெளியேறமாட்டார்கள்

## பொதுச் செயலாளர் துமிந்த நம்பிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து எவரும் வெளியேற மாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



சாதாரணமாக குடும்ப வாழ்க்கையிலும் சில பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், அவற்றை வீட்டிற்குள்ளேயே தீர்க்க வேண்டும் என்றும் கூறிய அமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் உள்ளக ரீதியான பிரச்சினைகள் இருப்பதாகவும் அவற்றை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தனியாக கட்சியொன்றினால் செய்ய முடியாமல் போனதை பிரதான இரண்டு கட்சிகள் இணைந்து நாட்டிற்கு செய்திருப்பதாகவும், அது கட்சியின் தீர்மானம் என்றும் எவரும் கட்சியை விட்டு வெளியேறுவதில்லை என்றும் தெரிவித்தார்.

இது தவிர ஒரு சிலரின் கருத்துக்கள் ஊடகங்கள் ஊடாக பாரியளவில் பிரசாரம் செய்யப்படுவதாகவும் இதனால் நாட்டில் பாரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அமைச்சர் துமிந்த தெரிவித்தார். (இ-7)

# வருமான வரி சட்டமூலத்தை தோற்கடிப்போம்

## ஜே.வி.பி.உறுதி

(கொழும்பு)

புதிய வருமான வரிச் சட்டமூலம் வகுக்கப்பட்டிருப்பது சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்காகவே என்றும் அதனை தோற்கடிக்க வேண்டும் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

அந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமது கட்சி முன்னெடுக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

புதிய வருமான வரிச் சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தினால் வகுக்கப்பட்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட ஒன்று. இந்த சட்டமூலத்தின் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் ஏற்படுத்தும் பாரியளவான வரித்திருத்தங்கள் முன் வைக்கப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்புரிமையுடைய 25 இலட்சத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நிதி இதன்மூலம் குறைக்கப்படுகிறது.

அதேபோன்று இதற்கு முன்னர் பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்டிருந்த வரி நிவாரணங்கள் முழுமையாக நீக்கப்படுகின்றன. புதிய உற்பத்தியாளர்களுக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த வரி நிவாரணம் இந்த சட்டமூலத்தின் மூலம் நீக்கப்பட்டு வரிக்கு உட்படுத்தப்படுகிறது.

இந்த அரசாங்கத்திற்கு ஐ.எம்.எப். அழுத்தம் கொடுக்கின்றது. ரணில்-மைத்திரி கூட்டு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டியது ஐ.எம்.எப். இற்கு அல்ல. இந்த நாட்டு மக்களுக்கே. அதன் காரணமாக இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்காக மக்கள் விடுதலை முன்னணி தயார் என்று அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# மின்சார சபை ஊழியரை தாக்கிய சந்தேக நபர் கைது

முல்லேரியா, அம்பதல பகுதியில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத காரணத்தால் மின் இணைப்பை துண்டிக்கச் சென்ற, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இருவரைத் தாக்கிய சந்தேக நபரை, மிரிஹான பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் தெலிசுதா என்று அழைக்கப்படும் ரியந்த ஸ்ரீனந்த என்ற நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில், மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# பொலிஸ் எஸ்.எஸ்.பி. விரைவில் கைதாகலாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. ஆர்.எல்.ரணவீர கைது செய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாஜுடீன் கொலை, ரதுபஸ்வல துப்பாக்கிச் சூடு, வெலிக்கடை சிறைச்சாலை தாக்குதல் சம்பவம், பியகம விலேஜ் ஹொட்டல் உரிமையாளர் கொலை உட்பட சில சம்பவங்கள் தொடர்பில் ரணவீரவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரணவீரவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும் இதற்கு முன்னர் இவர் கைது செய்யப்படவிருந்த போதிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக பதவி வகித்த காரணத்தினால் கைது செய்ய முடியாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும் ரணவீர அண்மையில் வேறு பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனால் அவர் விரைவில் கைது செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது. (இ-7)

# எழுத்தாளர்கள் கௌரவிப்பு விழா ஜனாதிபதி மைத்திரி தலைமையில்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமும் கொடகே புத்தக வெளியீட்டு நிறுவனமும் இணைந்து நடத்திய கொடகே சிரேஷ்ட எழுத்தாளர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றது.

சிரேஷ்ட எழுத்தாளர் 15 பேருக்கு ஜனாதிபதியால் கௌரவ விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுடன் இணைந்ததாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு என்ற போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் ஜனாதிபதியால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (இ-7)

# அரசமைப்புச் சபையிலிருந்து கூட்டு எதிரணி வெளியேறாது

## பந்துல குணவர்த்தன உறுதி

அரசமைப்பு சபையிலிருந்தோ அல்லது அதன் வழி நடத்தல் குழுவிலிருந்தோ பொது எதிரணியினர் விலகும் உத்தேசம் எதுவும் கிடையாது என பொது எதிரணியின் பேச்சாளர் பந்துல குணவர்த்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசமைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் எதிரணிக் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் அரசமைப்பு தொடர்பில் சுயாதீனமான தீர்மானங்களை எடுக்கக்கூடிய உரிமை இருக்கின்றது. அதற்கேற்ப அந்தக் கட்சிகள் தங்களது எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரசமைப்பு சபையிலிருந்து விலகியுள்ள போதிலும்பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் இந்தச் சபையில் தொடர்ந்து அங்கம் வகிக்கும்.

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த பொது எதிரணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசு குறித்து யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசு அதன் கோட்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் உறுதிபூண்டுள்ளது. எனவே அரசு குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்கமுவவில் அமைக்கப்படும் வைத்தியசாலையின் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான தேசிய கட்சிகளும் இணைந்து அமைத்துக்கொண்ட தேசிய அரசு (நல்லாட்சி அரசு) 2020ஆம் ஆண்டுவரை தொடரும் எனவும் 2020 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் 2025 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசு மனிதநேய கொள்கையின்படி மக்களுக்கான சலுகைகளை வழங்கும். ஏழைகளுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கியது. நல்லாட்சி அரசால் நாட்டுக்கு செய்யப்படும் சேவையை பணத்தால் அளவிடமுடியாது. மனிதநேயத்தின் அடிப்படையில்தான் அளவிடமுடியும்.

சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் பாரிய பணியை 'நல்லாட்சி அரசு முன்னெடுத்து வருகின்றது. மாற்றத்தை ஏற்படுத்தும் போது பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்துகின்றனர்.

இது பண்டாரநாயக்க காலம் முதல் தொடர்கின்றது. அபிவிருத்தியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

உயர்கல்வி மற்றும் சுகாதாரத்தை தனியார்மயப்படுத்துவதாக சிலர் கூறுகின்றனர். உயர்கல்வியையும் சுகாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவே பாரிய சேவையைச் செய்துள்ளார்.

புகையிலையைக் கட்டுப்படுத்த நல்லாட்சி அரசு எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது. அதனை ஜனாதிபதியே தீர்மானித்திருந்தார்.

நல்லாட்சி அரசை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு எதிராக பல தடைகள் ஏற்படுகின்றன. ஆனால், அரசு தனது பயணத்தை நிறுத்தாது. 2020ஆம் ஆண்டுவரை தேசிய அரசு நல்லாட்சி அரசு தொடரும் என்பதுடன், அதன்பின் புதிய ஒப்பந்தத்துடன், 2025ஆம் ஆண்டு வரையும் இந்த அரசு தொடரும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையர்களுக்கு அச்சுறுத்தல் இல்லை

எந்த விதமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அவற்றுக்கு முகம்கொடுக்கும் சக்திமிக்க இராச்சியமாக கட்டார் அமைந்துள்ளது. எனவே அங்கு பணியாற்றும் இலங்கையர்களுக்கு எந்தவித பாதிப்புக்களும் இல்லையென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அக்கட்சியின் இளைஞர் அணி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டார் நாடு எந்த அளவிலான அழுத்தங்கள் ஏற்பட்டாலும் அவற்றுக்கு முகம் கொடுக்கும் சக்திமிக்க நாடாக இருக்கின்றது. எனவே, அங்கு பணியாற்றும் இலங்கையர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் ஏற்படாது.

தற்போதும் அந்த நாட்டிற்கான பணியாளர்கள் இலங்கையிலிருந்து சென்றவண்ணமே இருக்கின்றார்கள். எனவே அச்சுறுத்தலான நிலைப்பாடொன்று அந்நாட்டில் தற்போதைக்கு இல்லை.

அந்த நாட்டிற்கு மேற்கொள்ளப்படும் விமான சேவைகளிலும் தற்போதும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. வழமை போலவே அந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. எனவே இலங்கை பணியாளர்கள் குறித்தும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொக்கேய்ன் போதைப்பொருள் கடத்தலுடன் சதொச நிறுவனத்திற்கு தொடர்பில்லையாம்



(கொழும்பு)

கொக்கேய்ன் போதைப் பொருள் கடத்தல் சம்பவத்துடன் சதொச நிறுவனத்திற்கு தொடர்பு கிடையாது என அதன் தலைவர் ரீ.எம்.கே.பி. தென்னக்கோன் தெரிவித்துள்ளார். சதொச தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரியளவிலான கொக்கேய்ன் போதைப் பொருள் அண்மையில் சீனிக் கொள்கலன் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தது. விலை மனுக்கோரி குறைந்த விலையை கோரிய வர்த்தகரிடமிருந்து சதொச நிறுவனம் சீனியை இறக்குமதி செய்ய தீர்மானித்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கொக்கேய்ன் போதைப் பொருள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருக்கவில்லை எனவும் நாளாந்த கூலி அடிப்படையில் கொள்கலன் இறக்கும் இடத்தில் பணியாற்றும் ஊழியர்களே இந்த சந்தேகத்திற்கு இடமான பொதிகள் குறித்துப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரியே சு.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராவார்

## முதலமைச்சர் இசுறு உறுதி



(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். அதனை நிராகரிக்க அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

மேல் மாகாணசபை முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியைப் போன்று ஜனநாயகம் மிக்க தலைவர் இதன் பிறகு நாட்டுக்கு கிடைப்பாரா? என்று தெரிவிக்க முடியாது.

அதனால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அவரை கட்சியின் தலைவராக ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அத்துடன் அவர்மீது வைத்திருக்கும் நம்பிக்கை காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையினர் அவருடன் இணைந்திருக்கின்றனர்.

அத்துடன் அடுத்துவரக்கூடிய 2020 ஜனாதிபதி தேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார். அது கட்சியின் தீர்மானமாகும். அதனை ஜனாதிபதி நிராகரிக்க முடியாது.

கேள்வி:- ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளாரோ?

பதில்:- பொது வேட்பாளராக இருக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார். ஆனால் அவர் இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். அதனால் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முடியாது என அவருக்கு தனித்து தீர்மானம் எடுக்க முடியாது.

கேள்வி:- ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால், அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறியதாக குற்றம் சாட்டப்படுவாரே?

பதில்:- அவ்வாறு இல்லை. ஜனாதிபதி பொதுவேட்பாளராக இருக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார். அப்போது அவருக்கு எதனையும் தெரிவிக்க முடியும். நான் மாகாணசபை உறுப்பினராக இருக்கும்போது பல விடயங்களை தெரிவிக்க முடியும். ஆனால் தற்போது முதலமைச்சராக இருக்கும் நிலையில் என்னால் தனித்து ஒருவிடயத்தை தெரிவிக்க முடியாது.

அதனால் பொதுவேட்பாளராக இருக்கும் போது தெரிவித்த விடயங்களை இப்போது சம்பந்தப்படுத்த முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்றவகையில் கட்சிக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெற்றிகரமாக அமைந்த பங்களாதேஷ் பயணம்

## வெளிவிவகார அமைச்சர் ரவி தகவல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் பங்களாதேஷுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயமானது மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. இதன் போது 14 உடன்படிக்கைகள் இரண்டு நாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்டன என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

பங்களாதேஷ் நாட்டின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இது பயன்தரும் விஜயமாக அமைந்தது. இந்த விஜயத்தின்போது இரண்டு நாடுகளுக்குமிடையில் 14 உடன்படிக்கைகள் கைச்சாத்திப்பட்டன.

சேவைத்துறை, கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. மேலும் இரண்டு நாடுகளுக்கிடையில் முதலீடுகளை அதிகரித்துக் கொள்வதற்கும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இந்த விஜயம் தொடர்பாக பல்வேறு தவறான கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவந்தன. இலங்கை வர்த்தக சபையின் பிரதிநிதிகள் இந்த விஜயத்தில் பங்கேற்றனர். அதற்காக அரசாங்கம் நிதி செலவிடவில்லை. எனினும் பல தவறான தகவல்கள் வெளிவந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து அமைத்துள்ள கூட்டணி ஆட்சி தொடர்பில் பங்களாதேஷில் சிறந்த பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அந்தவகையில் மிகவும் வெற்றிகரமான ஒரு விஜயம் மேற்கொள்ளப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர் றிசாத் பதியுதீன் உடன் பதவி விலக வேண்டும்

## ஆனந்த சாகர தேரர் வலியுறுத்து



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீன் உடனடியாக பதவி விலக வேண்டும் என பாகியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள சதொச களஞ்சியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த சீனி கன்டெய்னரிலிருந்து கொகேய்ன் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ள நபர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தத்தக்க அமைச்சர் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் பொலிஸாருக்கு விசாரணைகளை முன்னெடுக்க முடியாது.

மேலும் மீட்கப்பட்டுள்ள கொகேய்ன் தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீன் மீது தமக்கு சந்தேகம் உள்ளதாகவும் ஆனந்த சாகர தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை வெளிப்படுத்துவதால் தமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தாலும் பிரச்சினை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பலர் இது தொடர்பில் கதைக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்த போதும், தான் கொலை செய்யப்பட்டாலும் உண்மை உலகுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இரண்டு வாரங்களில் பெரும்பான்மை பறிபோகும்!

## மகிந்த அணி எச்சரிக்கை



அரசாங்கம் இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும் என்று கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எச்சரித்தார்.

கொழும்பில நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தற்போது நடப்பது ஐ.தே.கவின் ஆட்சி தான். எனவே இதில் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும்.

நாடு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்கின்ற ஆற்றலை இந்த அரசாங்கம் இழந்து விட்டது.

இத்தகைய அரசாங்கத்தில் பதவி வகிப்பது பயனற்றது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தை விட்டு விலகி எம்முடன் இணைய வேண்டும்.

எல்லோரும் எம்முடன் இணைவார்கள் என்று நான் எண்ணவில்லை. ஆனால் இணைய விரும்புபவர்களை நாம் வரவேற்கிறோம்" என்று தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட தினேஷ் குணவர்த்தன எம்.பி. இலங்கையின் தற்போதைய அரசாங்கம் சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வர முனைகிறது என்று குற்றம் சாட்டினார்.

அத்துடன், கூட்டு எதிரணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன. அது பொய்யான செய்தி. ஊடகங்கள் இதனை பெரிய எழுத்துக்களில் வெளியிடக் கூடாது.

கூட்டு எதிரணிக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் தனித்துச் செயற்பட முடிவு செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் இணையத்தளத்தை முடக்கிய நபர்கள் நேற்று விடுதலை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணைய தளத்தை முடக்கிய நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு பிரதான நீதவான் இவ்வாறு விடுதலை செய்துள்ளார்.

17 வயதான மாணவர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர் ஜனாதிபதியின் இணையத்தளத்தை முடக்கியதாக குற்றம் சுமத்தி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதவான் லால் ரணசிங்க பண்டாரவிடம் தெரிவித்திருந்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்களையும் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# அரசாங்கம் நாய்களை கொலை செய்யவில்லை

## அமைச்சர் சம்பிக்க மறுப்பு



துப்பாக்கியை காட்டி இராணுவத்தைப் பயன்படுத்தி குப்பை மேட்டை மறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அரசாங்கம் மக்களுடனேயே இருந்து இந்தப் பிரச்சினையை தீர்த்ததாகவும் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஊடகங்கள் ஊடாக மிருக வதைக்கு எதிராக நடிக்காமல், மிருகங்களுக்காக உண்மையாக முன்னிற்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

500 இலட்சம் ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்ட வார சந்தையை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டு செல்லும் போது, அரசாங்கம் நாய்களை கொலை செய்கிறது, மாடுகளை கொலை செய்கிறது என விதவிதமாக குற்றம் சுமத்துகின்றனர்.

நாய், மாடுகள் தொடர்பில் பரிதாபப்படுவோருக்கு நாம் கூறுகின்றோம், பாதைகளில் பொலித்தீன்களை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அப்பாவி மிருகங்களின் உயிரைப் பாதுகாக்க முன்வருமாறு.

பேஸ்புக் ஊடாகவும் ஊடகங்கள் ஊடாகவும் மிருக வதைக்கு எதிராக நடிக்காமல் உண்மையாக அந்த மிருகங்களுக்காக முன்னிற்குமாறு கூறுகின்றோம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1139

Search for people, places and things — Nagendram Home

### பேபி




### மகி




### தர்சா




### செல்வம்




### வதனா




### நந்தினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2017-16.08.2017

ஜோதிடக் கலாமணி
சிவ்புரி சிங்காரம்

## மதிப்பும் மரியாதையும் உயரும்!



மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்காத கும்ப இராசி அன்பர்களே!

உங்களின் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்மத்தில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். கடந்த ஒன்றரை வருட காலமாக சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் சிக்கியிருக்கிறீர்கள். எனவே பல காரியங்களில் தடைகள் ஏற்பட்டிருக்கலாம். இனம்புரியாத கவலை இதயத்தைச் சூழ்ந்திருக்கலாம். எதைத் தொட்டாலும் தாமதம் ஏற்படுகின்றதே என்று நினைத்திருக்கலாம்.

இதற்கெல்லாம் விடிவு காலம் வரப்போகிறது. இம்மாதம் ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. ஜென்மத்திலுள்ள கேது பின்னோக்கிச் செல்லப் போகிறார். மகரத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் மனக்கலக்கம் அகலும். மதிப்பும் மரியாதையும் உயரும். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு 6ஆம் இடத்திற்கு வரப்போகிறார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் காணப் போகிறீர்கள். உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடிவரும். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்கள், குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் நேரத்தில், அதற்கான முயற்சியில் ஈடுபடலாம். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம்பெற்றிருந்தால் தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும்.

தற்சமயம் உங்கள் இராசியில் இருந்து சர்ப்ப கிரகங்கள் விலகுவதால், யோகபலம் பெற்ற நாளில், அனுகூலம் தரும் ஸ்தலங்களில் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. அப்பொழுதுதான் பாம்பு கிரகங்களின் ஆதிக்கத்தால் வரும் பலன்கள், நற்பலன்களாக அமையும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு 3 மாத காலத்திற்குள் நல்ல நாள் பார்த்து சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்ள வேண்டும். வார வழிபாடாக துர்க்கையையும், வெள்ளிக்கிழமை அம்பிகையையும் வணங்குங்கள்.

சிம்ம புதனும், வக்ர புதனும்!

ஜூலை 22ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் சப்தம ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். பயணங்களால் பலன் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் உருவாகும். நிலையான வருமானத்திற்கு வழி அமைத்துக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

ஜூலை 30ஆம் திகதி சிம்மத்திலும், ஓகஸ்ட் 6ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறப் போகிறார். இந்த வக்ர காலம் உங்களுக்கு நற்பலன் வழங்கும் காலமாகும். பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் புதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். அதைச் சுபவிரயமாக மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். அஷ்டமாதிபதி வக்ரம்




பெறுவதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம்.

ராகு-கேதுக்களின் பெயர்ச்சி காலம்!

ஜென்ம கேதுவும், சப்தம ராகுவும் விலகும் மாதமிது. அந்த நிகழ்வு ஜூலை 27ஆம் திகதி நிகழவிருக்கிறது. கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இதுவரை இருந்த தடைகள் இனி அகலும். கடைதிறப்பு விழாக்களும், கட்டடத் திறப்பு விழாக்களும் காணப் போகிறீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். புதிய உத்தியோக முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முற்கோபத்தின் காரணமாக முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் இனி அகலும். ராகு-கேது பலத்தால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். அதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

சனியின் வக்ர நிவர்த்தி காலம்!

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகின்றார். இராசிநாதன் சனி வக்ர நிவர்த்தியாகும் பொழுது, ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். ஊர்மாற்றச் சிந்தனை அகலும். தொழிலில் வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும். வெளிநாட்டு யோகம் ஒருசிலருக்கு ஏற்படும்.

பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்

இம்மாதம் நன்மைகள் நடைபெறும் மாதமாகும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிணக்குகள் அகன்று இணக்கம் கூடும். தாய்வழி ஆதரவு உண்டு. கூடப்பிறந்தவர்கள் உங்களோடு இணைந்து செயற்பட முன்வருவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். பணி உயர்வு பற்றிய தகவல் வந்து சேரும். ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் சர்ப்ப சாந்தி செய்வதோடு வெள்ளிக்கிழமை தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.

## சோகங்கள் மாறி சுகங்கள் வந்து சேரும்!



எளிமையை விரும்பும் மீன இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் இருந்தபடியே உங்கள் இராசியைப் பார்க்கிறார். அதுமட்டுமல்ல 3,11 ஆகிய இடங்களையும் பார்க்கிறார். எனவே பொருளாதார நிலை உயரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தொழிலில் இலாபம் கிடைக்கும். எதிரிகள் விலகுவர். இல்லத்தில் அமைதி நிலவும்.

உங்கள் இராசிநாதனாகவும் குரு விளங்குவதால், அவரது பார்வைக்கு பலன் அதிகம் உண்டு. எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடல் தாண்டிச் சென்று சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்து சேரும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். வீடுகட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் இதுவரை ஏற்பட்ட தாமதம் இனி அகலும். சொத்தில் கிடைக்கும் தொகையை, தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்வீர்கள்.

தனாதிபதி செவ்வாய் பலம் இழந்திருந்தாலும் சூரியன், புதன் ஆகியவற்றுடன் இணைந்திருப்பதால் புத ஆதித்ய யோகம் ஏற்படுகிறது. எனவே பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடலாம். வீடு, வாகனம் வாங்கும் முயற்சிக்கு கடன் கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு அது கைகூடும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

இம்மாதத்தில் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கிறது. உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு 5ஆம் இடத்திற்கும், 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது 11ஆம் இடத்திற்கும் பின்னோக்கிச் செல்லவிருக்கிறார்கள். இந்த சர்ப்ப கிரகங்களின் மாற்றம் உங்களுக்கு நன்மையை வழங்கும். லாப கேது உங்களுக்கு இலாபத்தை வழங்கப் போகின்றது. அதே நேரத்தில் பஞ்சம ராகு, பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட வில்லங்கங்களை விலகச் செய்யும். மேலும் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ராகு-கேது வழிபாடுகளையும் நீங்கள் முறையாக மேற்கொண்டால் சோகங்கள் மாறும். சுகங்கள் வந்து சேரும்.

சிம்ம புதனும், வக்ர புதனும்!

ஜூலை 22ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் செல்கிறார். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைக் கொடுக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். ஒரு சிலருக்கு உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். உயர் பதவியில் உள்ளவர்களுக்கு அனுகூலத்தோடு புது முயற்சிகளிலும் ஈடுபடுவீர்கள்.

வெளிநாட்டிற்குச் சென்று உத்தியோகம் பார்க்கும் அமைப்பு . உருவாகலாம். கண்ணியம் மிக்க நண்பர்கள் உங்கள்




கடமைக்கு உறுதுணையாக இருப்பர். குடும்பத்தில் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். ஜூலை 30ஆம் திகதி சிம்மத்திலும், ஓகஸ்ட் 6ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ரம் உங்களுக்கு வளர்ச்சி கூடும் விதத்திலேயே இருக்கிறது. குறிப்பாக கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் யோகத்தைச் செய்யும். எனவே தாய்வழி ஆதரவு உண்டு. இடம், பூமி பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். திருமண முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.

ராகு-கேது பெயர்ச்சி!

ஜூலை 27ஆம் திகதி கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். பஞ்சம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

வாரிசுகளின் வளர்ச்சிக்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். மகர கேதுவின் ஆதிக்கத்தால் இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் இருக்கும். பணியாளர்களிடம் ஏற்பட்ட தொல்லை அகலும். பங்குதாரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் இருக்கும் சனி 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வக்ர நிவர்த்தியாவதால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். சொல்லை செயற்படுத்துவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் உயரும். பயணங்கள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். குதூகலம் கூடும். வழக்கமான பணிகளில் இருந்த தொய்வு அகலும். வங்கிகளில் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். உயர் பதவிகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். ராகு-கேதுக்களுக்குரிய வழிபாடும், பிரதோஷ வழிபாடும் பெருமைகளைச் சேர்க்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இரண்டு வாரங்களில் பெரும்பான்மை பறிபோகும்!

## மகிந்த அணி எச்சரிக்கை



அரசாங்கம் இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும் என்று கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எச்சரித்தார்.

கொழும்பில நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தற்போது நடப்பது ஐ.தே.கவின் ஆட்சி தான். எனவே இதில் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும்.

நாடு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்கின்ற ஆற்றலை இந்த அரசாங்கம் இழந்து விட்டது.

இத்தகைய அரசாங்கத்தில் பதவி வகிப்பது பயனற்றது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தை விட்டு விலகி எம்முடன் இணைய வேண்டும்.

எல்லோரும் எம்முடன் இணைவார்கள் என்று நான் எண்ணவில்லை. ஆனால் இணைய விரும்புபவர்களை நாம் வரவேற்கிறோம்" என்று தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட தினேஷ் குணவர்த்தன எம்.பி. இலங்கையின் தற்போதைய அரசாங்கம் சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வர முனைகிறது என்று குற்றம் சாட்டினார்.

அத்துடன், கூட்டு எதிரணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன. அது பொய்யான செய்தி. ஊடகங்கள் இதனை பெரிய எழுத்துக்களில் வெளியிடக் கூடாது.

கூட்டு எதிரணிக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் தனித்துச் செயற்பட முடிவு செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# அரசாங்கம் நாய்களை கொலை செய்யவில்லை

## அமைச்சர் சம்பிக்க மறுப்பு



துப்பாக்கியை காட்டி இராணுவத்தைப் பயன்படுத்தி குப்பை மேட்டை மறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அரசாங்கம் மக்களுடனேயே இருந்து இந்தப் பிரச்சினையை தீர்த்ததாகவும் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஊடகங்கள் ஊடாக மிருக வதைக்கு எதிராக நடிக்காமல், மிருகங்களுக்காக உண்மையாக முன்னிற்க வேண்டும்என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

500 இலட்சம் ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்ட வார சந்தையை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டு செல்லும் போது, அரசாங்கம் நாய்களை கொலை செய்கிறது, மாடுகளை கொலை செய்கிறது என விதவிதமாக குற்றம் சுமத்துகின்றனர்.

நாய், மாடுகள் தொடர்பில் பரிதாபப்படுவோருக்கு நாம் கூறுகின்றோம், பாதைகளில் பொலித்தீன்களை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அப்பாவி மிருகங்களின் உயிரைப் பாதுகாக்க முன்வருமாறு.

பேஸ்புக் ஊடாகவும் ஊடகங்கள் ஊடாகவும் மிருக வதைக்கு எதிராக நடிக்காமல் உண்மையாக அந்த மிருகங்களுக்காக முன்னிற்குமாறு கூறுகின்றோம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் இணையத்தளத்தை முடக்கிய நபர்கள் நேற்று விடுதலை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணைய தளத்தை முடக்கிய நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு பிரதான நீதவான் இவ்வாறு விடுதலை செய்துள்ளார்.

17 வயதான மாணவர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர் ஜனாதிபதியின் இணையத்தளத்தை முடக்கியதாக குற்றம் சுமத்தி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதவான் லால் ரணசிங்க பண்டாரவிடம் தெரிவித்திருந்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்களையும் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1139

Search for people, places and things | Nagendram Home

| பேபி | மகி | தர்சா |
|---|---|---|










| செல்வம் | வதனா | நந்தினி |
|---|---|---|










நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வருமுன் காப்போம்

தேரிக்குடியிருப்பு என்ற ஊரின் எல்லையில் இருந்த காட்டில் பெரிய குளம் இருந்தது. அதனை ஒட்டி சிறிய நீரோடை ஓடிக் கொண்டிருக்கும்.

அந்தக் குளத்தில் நிறைய மீன்கள், நண்டுகள் மற்றும் அனைத்து நீர்வாழ் இனங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ராமு, சோமு, தாமு என்ற மூன்று மீன்கள் நல்ல நண்பர்களாக இருந்தன். அந்த மூன்று மீன்களும் எங்கே சென்றாலும் ஒன்றாகவே போகும். ஒரு பயமும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வந்தன.

அவைகள் மகிழ்ச்சியை கெடுக்கும் விதமாக ஒரு நாள் மாலையில் ஒரு இரண்டு மனிதர்கள் அங்கே வந்தார்கள், வேட்டையாடிய களைப்பு முகத்தில் தெரிந்தது. குளத்து நீரை அருந்தி விட்டு, குளத்தை நன்றாக ஆராய்ந்தார்கள், பின்னர் அவர்களில் ஒருவர் "இந்த குளத்தில் நிறைய மீன்கள் இருக்கிறதே, அதுவும் நன்றாக வளர்ந்து கொழு கொழு என்று இருக்கிறதே, நாம் வீணாக காடு மேடு என்று அலைந்து வேட்டையாட வேண்டாம், பேசாம இங்கே நாளை வந்து வலையை விரிப்போம், மாட்டிக் கொள்ளும் மீன்களை விற்று பணம் சம்பாதிக்கலாம்" என்றார். மற்றவரும் "ஆகா, அருமையான யோசனையாக இருக்கிறதே" என்றார்.

இவர்கள் பேசுவதை கேட்ட ராமு என்ற மீன் பெருங்கவலை அடைந்தது, உடனே தன் நண்பர்களான சோமு, தாமுவிடம் கூறியது, காட்டின் நடுவில் இருந்ததால் இதுவரை பெரிய ஆபத்து வந்தது இல்லை, குளத்தின் நடுவில் போய் இருந்தாலும் பறவைகள் கூட தங்களை ஒன்றும் செய்தது இல்லை, இன்றோ இந்த மனிதர்களால் பெரிய ஆபத்து வந்து விட்டதே, என்ன செய்யலாம் என்று யோசித்தன.

ராமு எப்போதும் வரும்முன் காத்துக் கொள்ளும் மனம் படைத்த மீன், மற்ற மீன்களைப் பார்த்து, நாளை கண்டிப்பாக அவர்கள் இங்கே வருவார்கள், நாம் இன்று இரவே இக்குளத்தை விட்டு நீரோடையின் உதவியால் அருகில் இருக்கும் வேறு குளத்திற்கு போகலாம். சில காலம் போனபின்பு மீண்டும் இங்கே வரலாம் என்றது.

ராமுவின் நல்ல யோசனையை மற்ற இரு மீன்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சும்மா சொல்லி விட்டு போயிருப்பார்கள், அவர்களாவது நம்மை பிடிப்பதாவது, நீ வீணாக பயப்படுகிறாய் என்றன.


ராமு எவ்வளவோ சொல்லிப் பார்த்தது, ஆனால் சோமு,தாமு இரு மீன்களும் கேட்கவில்லை. ராமு அந்த மீன்களிடம் மன்னிப்பு கேட்டு விட்டு தான் இன்று இரவே அந்த குளத்தை விட்டு போவதாக சொல்லி விட்டு இரவே தப்பி வேற குளத்திற்கு போய் விட்டது.

மறு நாள் காலையில் சோமு, தாமு இரண்டும் கூடிப் பேசின, மீன் பிடிப்பதாக சொன்னவர்களை காணவில்லை, சும்மா பேச்சுக்குச் சொன்னதை நம்பி ராமு வேற குளத்திற்கு போனது முட்டாள் தனம் என்று கேலி செய்தன.

சிறிது நேரத்தில் வலை விரிப்பதாக சொன்ன இருவரும் பெரிய வலையை எடுத்து வந்து எங்கே வலை வீசுவது என்று பேசினார்கள். அவ்வளவு தான் அதைக் கேட்டு சோமு "ஐயோ கடவுளே!, ராமு அப்போதே சொன்னதே, இரவே தப்பியிருக்கலாமே" என்று புலம்பியது.

ஆனால் தாமு அந்த சூழ்நிலையிலும் கொஞ்சமும் பயப்படவில்லை, "ஏன் பயப்படுகிறாய், குளத்தில் எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன, நாம் மறைந்துக் கொள்ளலாம்" என்றது.

சோமு கொஞ்சம் கொழு கொழு மீன், அதற்கு பயம் வந்து விட்டது.



அதற்குள் மீனவர்கள் வலை வீச, தாமு ஓடி ஒளிந்து கொண்டது. சோமு மாட்டிக் கொண்டது, வலையில் இருந்து தன்னை விடுவிக்க படாதபாடுபட்டது, இறுதியில் சோமுவின் வால் பகுதியும் முதுகும் சேதமடைந்து, வலையில் இருந்து விடுபட்டு நீரோடையில் பாய்ந்து தப்பி விட்டது. உடல் எங்கும் இரத்தம், வரும் முன் காக்காமல் வந்த போது காக்க நினைத்ததன் முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.

தாமு குளத்தின் உள்ளே இருந்த பாறையின் அடியில் ஒளிந்து கொண்டது, தான் வீரமாக தப்பியதை நினைத்து பெருமைப்பட்டது. அது ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. வந்த இருவரில் ஒருவர் நீண்ட கம்பை எடுத்து குளத்தின் அடியில் இருக்கும் பாறைகளில் செலுத்தி அசைத்தார், அவ்வாறு செய்கையில் ஒரு முறை அந்த கம்பானது தாமுவை தாக்கியது. தாமு தப்பிக்க நினைத்து அதிலிருந்து வெளியே வர, அங்கே இரு வலையில் மாட்டிக் கொண்டது.

சிறிது நேரத்தில் மீனவர்கள் வலையை வெளியே எடுத்து மாட்டிய அனைத்து மீன்களையும் தரையில் போட்டு கொன்றார்கள். அதில் தாமுவும் ஒரு மீன்.

வரும்முன் காப்போம் என்ற கொள்கை கொண்ட ராமு ஒரு ஆபத்தும் இல்லாமல் தப்பி, மகிழ்ச்சியாக வாழ்ந்தது. வந்த போது காப்போம் என்ற கொள்கை உடைய சோமு, உடல் எங்கும் காயப்பட்டு, மற்ற மீன்களுக்கு பயந்து பயந்து வாழ்ந்தது. வந்தபின்பு பார்ப்போம் என்ற கொள்கை உடைய தாமுவோ கொல்லப்பட்டு விட்டது.

குழந்தைகளே! இக்கதையானது நம் அனைவருக்கும் நல்ல பாட எந்த விடயத்தையும் வரும் முன்பே யோசிக்க வேண்டும். மழைக்கால என்றால் வெளியே செல்லும் போது கையில் குடை இருக்க வேண்டும். தேர்வு வருகிறது என்றால் ஒரு வாரத்திற்கு அனைத்துப் பாடங்களையும் படித்து முடிக்க வேண்டும். கடைசி நேரத்தில் படிக்கத் தொடங்கினால் அது பயன் அளிக்காது. எனவே நாம் எப்போதும் வரும்முன் காப்போம் என்ற கொள்கையை பின்பற்ற வேண்டும். பின்பற்றினால் கவலையின்றி வாழலாம்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1499 - புனித ரோமப் பேரரசின் முதலாம் மாக்சிமிலியனின் படைகளை சுவிஸ் படைகள் டொனார்க் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் வென்றன.
- 1587 - வட கரோலினாவின் ரோனோக் தீவில் ஆங்கிலேயர்களின் இரண்டாவது தொகுதி குடியேற்றவாதிகள் வந்திறங்கினர்.
- 1812 - வெல்லிங்டன் பிரபு தலைமையிலான பிரித்தானியப் படைகள் ஸ்பெயினில் சலமாங்கா என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1823 - யாழ்ப்பாணத்தில் பட்டிக்கோட்டா குருமடம் டானியேல் வாரன் புவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1916 - கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோவில் ஊர்வலமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 1933 - வைலி போஸ்ட் 15,596 மைல்களை 7 நாட்கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1944 - போலந்தின் தேசிய விடுதலைக்கான குழு நாட்டில் சீர்திருத்தங்களையும் நாசிகளுக்கெதிரான போரை முன்னெடுத்துச் செல்லவும், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கும் திட்டத்தையும் அறிவித்தது. போலந்தில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமானது.
- 1962 - நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக்கடங்காமல் சென்றதால் அது அழிக்கப்பட்டது.
- 1999 - விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசொப்டினால் வெளியிடப்பட்டது.
- 2003 - ஈராக்கில் சதாம் உசேனின் புதல்வர்கள் குவாசி, உதய் இருவரும் அமெரிக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதாமின் 14-வயதுப் பேரனும் கொல்லப்பட்டான்.
- 2009-சூரிய கிரகணம், ஜூலை 22: 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், வங்க தேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.

பிறப்புகள்

- 1559 - பிரின்டிசி நகர லாரன்சு, இத்தாலியப் புனிதர் (இ. 1619)
- 1904 - தொ. மு. பாஸ்கர தொண்டைமான், தமிழறிஞர்,எழுத்தாளர் (இ. 1965)
- 1915 - வாணிதாசன், புதுவைக் கவிஞர் (இ. 1974)
- 1923 -முக்கேஷ், இந்தியப் பாடகர் (இ. 1976)
- 1937-வசந்த் ரஞ்சானே, இந்தியத் துடுப்பாளர் (இ. 2011)
- 1953-எஸ். பி. சைலஜா, தென்னிந்தியத் திரைப்படப் பாடகி
- 1970 - தேவேந்திர பத்னாவிசு, மகாராட்டிராவின் 18 ஆவது முதலமைச்சர்
- 1982-தில்ருவன் பெரேரா, இலங்கை துடுப்பாட்ட வீரர்
- 1983 -நுவன் குலசேகர, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

இறப்புகள்

- 1619 - பிரின்டிசி நகர லாரன்சு, இத்தாலியப் புனிதர் (பி. 1559)
- 1832 - பிரான்சின் இரண்டாம் நெப்போலியன், பிரெஞ்சுப் பேரரசன் (பி. 1811)
- 1967 - கார்ல் சாண்ட்பர்க், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1878)
- 1968-முத்துலட்சுமி ரெட்டி, இந்தியாவின் முன்னோடிப் பெண் மருத்துவர், சமூகப் போராளி (பி. 1886)
- 1972 - டி. எஸ். பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர் (பி. 1914)
- 2012 - டொன் பொஸ்கோ, இலங்கையின் நாடக, திரைப்பட நகைச்சுவை நடிகர்
- 2013 - [illegible] தமிழ்த் திரைப்பட நடிகர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 110 | 80 | 160 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 90 | 120 | 100 | 80 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 250 | 400 | 250 | 350 |
| தக்காளி | 140 | 200 | 160 | 120 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 60 | 80 | 80 | 100 |
| கோவா | 150 | 200 | 140 | 80 | 120 | 140 | 160 |
| கரட் | 200 | 400 | 200 | 200 | 240 | 200 | 240 |
| பூசணி | 100 | 150 | 100 | 110 | 120 | 90 | 120 |
| புடோல் | 100 | 100 | 70 | 50 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 60 | 80 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 200 | 180 | 160 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 400 | 200 | 140 | 200 | 150 | 400 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 60 | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 120 | 50 | 140 | 140 | 120 |
| பயற்றங்காய் | 70 | 150 | 120 | 150 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 150 | 120 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 60 | 50 | 60 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 250 | 150 | 240 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 200 | 150 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 120 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | — | 100 | 140 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 30 | 60 | 50 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | — | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 180 | 150 | 200 | 250 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | — | 30 | 100 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 10 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 10 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | — | — | 120 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. – திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் தாய்ச்சமயப் பண்பாட்டில் ஒன்று ஆடி அமாவாசை விரதம்

இந்து மதம் அறுவகைப் பிரிவுகளைக் கொண்டது. அதில் ஒன்று சைவ சமயம்.

சைவம் என்றால் புலால் உண்ணாமை என்னும் விரதம் பூணுவது. அதனால்தான் சைவம் என்பதற்கு எதிர்ப் பொருள் அசைவம் என்றாயிற்று.

ஒரு சமயத்துக்கு எதிர்ப்பதம் இருக்க முடியுமா? என்ற கேள்வி எழுமாக இருந்தால், அதில் நியாயம் இருக்கவே செய்யும்.

ஆக, சைவம் என்பது ஒரு வாழ்க்கை முறை. இந்த மண்ணில் நமக்குக் கிடைத்த மனிதப் பிறவியின் மாண்பை வாழ்ந்து காட்டுவதனூடாக உணர்த்துவதே சைவ சமயத்தின் நோக்கம்.

அதிலும் சைவ சமயம் என்பது தமிழ் மக்களைச் சார்ந்துள்ளது.

அதாவது இந்து சமயத்தின் அறுவகைப் பிரிவுகளில் ஒன்றாக இருக்கக்கூடிய சைவ சமயம் தமிழ் மக்களின் தனித்துவமான சமயமாயிற்று.

ஆயினும் காலத்துக்குக் காலம் ஏற்படக் கூடிய ஆக்கிரமிப்புக்கள், குடியேற்றவாதங்கள், படையெடுப்புக்கள் என்பவற்றின் காரணமாக சமய மாற்றங்களும் நிகழ்ந்தது எனலாம்.

இச்சமய மாற்றம் ஒரு காலத்தில் தவிர்க்க முடியாததாக இருந்தாலும் பின்னாளில் தாய்ச் சமயத்துக்குத் திரும்புதல் என்ற நடைமுறை இருந்திருக்க வேண்டும்.

ஆனால் தாய்ச்சமயத்துக்கு திரும்புதல் என்ற கோசத்தை எழுப்பாமல், மதமாற்றத்துக்கு எதிரான பிரசாரங்களே மேற்கொள்ளப்பட்டன.

இதனால் தாய்ச் சமயமாகிய சைவ சமயமும் வருகைச் சமயமாகிய கத்தோலிக்கமும் சில புரிதலுடன் இணங்கிச் செல்கின்ற நிலைமை ஏற்படாமல் போயிற்று.

உண்மையில் தாய்ச்சமயத்துக்கு திரும்புதல் என்பதில் என்ற அழைப்புக்கு எவரும் எதிர்ப்பு மனநிலை கொண்டிருக்க மாட்டார்கள்.

ஆனால் மதம் மாறியவர்களை மீளவும் தாய்ச் சமயத்துக்கு வாருங்கள் என்று அழைக்காமல், சமய பேதத்தின் மூலம் தாய்ச் சமயமும் வருகைச் சமயமும் தத்தம் சமய வாதத்தை முன்வைத்தன.

இதன்விளைவு ஈழத்தின் ஆதிச்சமயமாகிய – தமிழர்களின் ஒரே சமயமாகிய சைவ சமயத்துக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இப்போது கூட தாய்ச்சமயத்துக்கு திரும்புங்கள் என்ற கோசத்துடன் ஓர் இயக்கத்தை உருவாக்கினால்; என் தாய், என் தந்தை, தந்தையின் தந்தை சார்ந்த சைவ சமயம் என்ற ஆழ் மன நினைவுகள் தாய்ச் சமயத்தின் மீதான விருப்பை வெளிப்படுத்த உதவியிருக்கும்.

இருந்தும் ஈழத்தில் இருக்கக்கூடிய சைவ சமய அமைப்புக்கள் அத்தகையதொரு ஏற்பாட்டைச் செய்யவில்லை என்பதைக் கூறித் தானாக வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் இப்போதிருக்கக் கூடிய சூழ்நிலையில், தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தின் உயரிய பண்பாட்டு முறைகளையும் விரதங்களையும் அனுஷ்டியுங்கள் என்ற அழைப்பையாவது எங்கள் கத்தோலிக்க சகோதரர்களிடம் விடுவது பொருத்தமானதாக இருக்கும்.

அவ்வாறான அழைப்பின் அடிப்படையில் நாளை மறுதினம் அனுஷ்டிக்கப்படவுள்ள ஆடி அமாவாசை விரதம் என்பது கத்தோலிக்கத் தமிழ் மக்களாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஓர் உன்னதமான விரதமாக இருக்கும்.

ஆம் இந்த மண்ணில் வாழ்ந்து அமரத்துவமடைந்த தந்தையை நினைந்து விரதம் இருந்து நன்றி செலுத்துகின்ற அந்த உன்னதமான விரதம் தமிழர்களுக்குரியது.

எனவே சமயத்தின் பெயரால் ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி என்ற உயரிய விரதங்களை ஒதுக்கிவிடாமல்,

அமர்த்துவம் அடைந்த தம் தந்தை, தாய்க்காக விரதம் இருந்து புனித தீர்த்தம் ஆடி பிதிர்க்கடன் தீர்க்கும் தமிழ்ப் பண்பாட்டில் தமிழர்கள் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும்.

இஃது தோசம் நீக்கி மங்கலகரமாக நம்மை வாழ வைக்கும்.

# கீரிமலை ஆலயச் சூழலில் புனிதத்தன்மையைப் பேணுக

### பிரதேச செயலாளர் அறிவிப்பு

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வு நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கேணியில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு சுவாமி வீதி வலம் வரும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்த அடியார்களும் பிதிர்க்கடன் தீர்க்க வரும் அடியார்களும் நடைமுறைகளைக் கடைப்பிடித்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

ஆலயச் சூழல் மற்றும் பிரதேசங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதுடன் அப்பிரதேசங்களில் பாதணிகளுடன் செல்வதைத் தவிர்க்கவும், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் இந்து சமய கலாசார பண்பாட்டை பேணிக்காக்கும் கலாசார உடைகளுடன் சமுகமளிக்கவும், இப்புனித பிரதேசத்தில் பொலித்தீன் பாவனையை தவிர்க்கவும், இப்புனித பிரதேசத்தில் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போட்டு பிரதேசத்தை புனிதமாகப் பேணுங்கள், வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தி, ஒழுங்குகளை கடைப்பிடித்துதவுமாறும் கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ-104)

# சவூதி இளவரசர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சவூதி அரேபியாவின் முன்னணி முதலீட்டாளரும் இளவரசருமான பஹத் பின்முக்ரீன் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றைய தினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட முக்கிய அமைச்சர்களை, சவூதி அரேபியா இளவரசர் அல் சவூத் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் முதலீடுகளையும் வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக விஜயம் செய்யும் இளவரசர் அல் சவூத், கிழக்கு மாகாணத்திற்கும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

### டெங்கு நோயினால் 98 ஆயிரம் பேர் பாதிப்பு

நாடளாவிய ரீதியில் டெங்கினால் 98 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 30 சதவீதமானோர் பாடசாலை மாணவர்களாவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## மாவிட்டபுரம் தேர் இன்று

அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா இன்று இடம் பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து ஷண்முகப் பெருமான் தேரில் எழுந்தருளுவார்.

காலை 8.45 மணிக்கு கந்தப்பெருமான் ஆரோகணித்து தேர் திரு வீதி பவனி இடம்பெறும். (மு)

### விளையாட்டு விழா

சங்குவேலி விநாயகர் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மாங்குளம் நகரம் ஒரு பகுதி, CATIC பனிக்கன் குளம், நீதிபுரம், அம்பகாமம், புளுமச்சி நாதகுளம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, புதியநகர், கோவிந்தன்கடை சந்தி, பன்னன் கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக் குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், SFHQ இரணைமடு, கனகபுரம், அம்பாள்குளம், ஜெயந்தி நகர், உருத்திரபுரம், செல்வா நகர், புதுமுறிப்பு, ஊற்றுப் புலம், கோணாவில், யூனியன் குளம், கன்னிகாபுரம், ஸ்கந்தபுரம், விநாயகர்குடியிருப்பு, அக்கராயன், கௌதாரிமுனை, டொன்பொஸ்கோ (மாங்குளம்), வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டான் கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66ம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, மத்திய வங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றட், கொக்காவில் இராணுவ படை முகாம் I, கொக்காவில் இராணுவ படை முகாம் II, கொக்காவில் இராணுவ படை முகாம் III, றூபவாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம்தொலைத் தொடர்பு மின் தடைப்படும். (இ-9)

# சாஸ்திரங்கள்

✦சிவன் தனது ஆட்காட்டி விரலினால் பிரம்மாவின் தலையைக் கிள்ளி எறிந்தார். ஆகவே ஆட்காட்டி விரல் அசுத்தமானது. பூஜை, தர்ப்பணம் முதலிய கர்மாக்களில் அவ்விரலை உபயோகிக்கக்கூடாது. தந்தை அல்லது அண்ணன் இருந்தால் ஆட்காட்டி விரலில் வெள்ளி மோதிரம் அணியக்கூடாது. வெள்ளி ருத்ரனது கண்ணீரால் உண்டானது.

-ஸதாசாரம்

## குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

மன அழுத்தத்தைக் குறைத்தல்,
யோகா, தியானம், வழிபாட்டில் ஈடுபடுதல்
கோபப்படுதல்.. உணர்ச்சி வசப்படுதல் என்பவற்றை இயன்றளவு தவிர்த்தல்
கோப்பி, தேநீர் அருந்துவதைக் குறைத்தல்
மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி ஒழுங்காக எடுத்துவரல்

உயர் குருதியமுக்கம் ஆரம்ப நிலையில் எந்த அறிகுறிகளையும் காண்பிக்காது.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖நம்மில் பெரும்பாலானவர்கள் இன்று வேதாந்திகளோ, புராணவாதிகளோ, தாந்திரிகர்களோ அல்ல. நாம் தீண்டாமைவாதிகளே. நமது சமயம் சமையலறையிலே உள்ளது. நமது தெய்வம் சமையல் பானையாயிற்று. நமது சமயமோ என்னைத் தொடாதே நான் சுத்தமானவன் என்பதே. இது இன்ம் ஒரு நூற்றாண்டு நடந்து வந்தால் நம்மில் ஒவ்வொருவரும் மனநோய் வைத்தியசாலையில் இருப்போம்.

❖ உனது இலட்சியத்தில் ஆழ்ந்து ஈடுபடல் வேண்டும். ஒரு கணம் ஈடுபடுவதல்ல; அமைதியாகவும் குலையாத முயற்சியோடும் நிலையாகவும் ஈடுபடவேண்டும். சாதகப் பறவை இடி மின்னல்கக்கு இடையிலும் ஆகாயத்தை அண்ணார்ந்து நோக்கிக் கொண்டிருக்கும். அது மழை நீரை அன்றி வேறு நீரைக் குடிக்கவிரும்பாது. அத்தகைய ஈடுபாடே தேவையானது.

❖தூய்மையை நாடும் போராட்டத்தில் அழிய வேண்டி வந்தால் அழிந்துவிடு. ஆயிரம் முறையும் மரணத்திற்கு நல்வரவு கூறு. தளர்வுறாதே. அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக விஷத்தை உண்ண வேண்டுமா.

❖மதம் பற்றி என்றும் போராடாதே. மதம் பற்றிய சண்டைகளும் வாதங்களும் எல்லாம் அறிவின்மையையே புலப்படுத்தும். சமயச்சண்டைகள் எப்போதும் வெளிக்காரணம் பற்றியதே. தூய்மையும் அறிவும் வெளியேறி உயிர் வறளும்போது சண்டைகள் தொடங்கும். அதற்கு முன்னால் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமநிலை தவிர்ப்பு உதைமூலம்

# ஊரெழு றோயல் அணியை வீழ்த்தி சம்பியனானது வதிரி டயமன்ஸ்







நவிண்டில் கலைமதி வி.கழகத்தால் நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட ரீதியிலான 11 நபர் கொண்ட மின்னொளியிலான உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் (19.07.2017) அன்று நடை பெற்ற போட்டியில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 02வது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பிறேம் குமார் (பீமா) அணிக்கான முதல் கோலினை பதிவு செய்ய ஆட்டம் பரபரப்பானது. தொடர்ந்த ஆட்டத்தின் 24வது நிமிடத்தில் நீண்ட தூரத்திலான நேர் உதைப்பினை றோயல் அணி வீரர் எடிசன் கோல் போட்டு ரசிகர்களை மகிழ்வித்ததுடன் முதல் பாதியாட்டம் 01:01 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தப்பட்டது.

தொடர்ந்த இரண்டாவது பாதியாட்டத்திலும் 43வது நிமிடத்தில் பிறேம்குமார் கோல் கம்பத்தை நோக்கி லாவகமாக தூக்கி போட்ட பந்தை றோயல் பின்கள வீரர் தடுத்தாடினார். இருப்பினும் கோல் கம்பத்தினுள் பந்து உட்சென்றதாக உதவி நடுவரால் அறிவிக்கப்பட்டமை டயமன்ஸ் அணி முன்னிலை பெற்றது

பதிலுக்கு வேகமாக ஆடிய றோயல் அணி வீரர்களின் சிறந்த பந்துப் பரிமாற்றத்துடன் 67வது நிமிடத்தில் நிதர்சன் கோலாக்க ஆட்டம் சமநிலையின் உச்சக்கட்டத்தை அடைந்ததுஇ இறுதியாட்ட நேர முடிவில் 02:02 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது.

இரு அணிகளும் பார்வையாளர்களின் எதிர்பார்பிற்கமைய போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை பரபரப்பாக ஆடியது சிறப்பானது. வெற்றிக்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பின் உதை முடிவில் 05:04 என்ற கோல் கணக்கினால் றோயல் அணியை வீழ்த்தி இவ் வருடத்திலும் வடமராட்சி உதைபந்தாட்ட கிண்ணத்தை தன்வசப்படுதியது டயமன்ஸ் அணி.

ஆட்ட நாயகனாக றோயல் அணி வீரர் எடிசன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணி வீரர் பிறேம் குமார் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸ் அணியின் கோல் காப்பாளர் ஜெனா தெரிவு செய்யப்பட்டார். (க)

# வல்வை றெஜின்போ அணி அரையிறுதியாட்டத்திற்கு தகுதி



வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் உள்ளூர் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை றெஜின்போ அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

19.07.2017 அன்று இடம் பெற்ற லீக் போட்டியில் றெஜின்போ அணியும் தீருவில் அணியும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட இச் சுற்றுப் போட்டியில் 25:17, 25:16என்ற புள்ளிகளைப் பெற்று றெஜின்போ அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று அரை யிறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது. (க)

# சாதனை மாணவர்கள் கௌரவிக்கும் நிகழ்வு

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த மன்னார் கல்வி வலயத்திற்குற்பட்ட மன்-கற்கிடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவ மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு 20.07.2017 அன்று பாடசாலையின் அதிபர் எஸ். பிரான்சிஸ் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. (க)



## 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.கழகம்

நவிண்டில் கலைமதி வி. க.நடத்திய யாழ்.மாவட்ட ரீதியிலான 11 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பாக ஆடியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலினை பெற்றுக் கொண்டது. இரண்டாம் பாதியாட்டத்தில் மேலும் சிறப்பாக ஆடிய இரு அணிகளும் கோல் பெறுவதற்கு முயற்சித்த போதும் இரு அணி வீரர்களதும் பின்கள வீரர்களினால் கோல் பெறும் வாய்ப்புக்கள் முறியடிக்கப்பட்டது.

இறுதியில் 1 : 1 என்று சமநிலையாக சமநிலை தவிர்ப்பு உதைமூலம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டது. (க)



# யாழ். மாவட்ட ரீதியிலான இளைஞர்களுக்கான கூடைப்பந்து

## மானிப்பாய் ஏஞ்சல் சம்பியன்





யாழ். மத்திய கல்லூரியை வீழ்த்தி மாவட்ட ரீதியிலான சம்பியனாகியது மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை. யாழ்.மாவட்டத்தில் இளைஞர்களிடையே கூடைப்பந்தாட்டத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் 04ஆவது ஆண்டாக நடத்தப்பட்டு வரும் மாவட்டம் தழுவிய கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் (19.07.2017) புதன் கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கலந்துகொண்டதுடன், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்க நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

11 வயது, 13வயது, 15வயது, 19வயது பிரிவுகளின் கீழ் பிரிவுகளுக்கான போட்டிகள் இடம்பெற்றதுடன் 19 வயதுக் குட்பட்டோருக்கான போட்டியின் இறுதிப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மற்றும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை என்பவற்றுக்கு இடையில் இடம்பெற்றது.

இதில் ஏஞ்சல் பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பியனானது. விருந்தினர்களால் வெற்றிபெற்றோருக்கான கோப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன. (க)



இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப போட்டியில் வெற்றிபெற்ற 13 வயதுப் பிரிவு சர்வதேச ஏஞ்சல் பாடசாலை மாணவர்களுக்கு வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் இறுதிப்போட்டியில் சான்றிதழ் வழங்கிய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த ஜனாதிபதி...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இதை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே களமிறக்கப்படுவார். இவர் முன்னாள் ஜனாதிபதியின் பூரண ஆசீர்வாதத்துடன் போட்டியிடுவார்.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி பதவிக்காக ரணில் விக்கிரமசிங்கவை கள மிறக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் ரணிலை தோற்கடிக்கும் சக்தி கோத்தபாயவுக்கே உள்ளது. அதனால் அவரை நாம் களமிறக்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (மு-30)

## வேம்படி மகளிர்...

வித்தனர். ஆசிரியர்கள் சிலருக்கும் அந்த திரவ துளிகள் பட்டது.

குறித்த துளிகளை கழுவிய போது துளிகள் பட்ட இடங்கள் எரிவதும் கடிப்பதுமான உணர்வு ஏற்பட்டதாக மாணவிகள் தெரிவிததனர். ஒரு மாணவி தலை சுற்றி வாந்தி எடுத்திருந்தார். உடனடியாக பொது சுகாதார பரிசோத கரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண் டேன். அவர்கள் உடனடியாக வந்து பார்வையிட்டதுடன் திரவத்தின் மாதிரியையும் பெற்று சென்றுள்ளனர்.

எரிவு காயத்தால் பாதிக்கப்பட்ட 16 மாணவிகள் மற்றும் ஆசிரியை ஒருவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி அவர்களின் பெற்றோர்களுக்கும் அறிவித்திருந்தோம். மதியம் 12 மணிக்கு பின்னர் அவர்கள் வீடு திரும்பியுள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் எதுவும் எமக்கு உடனடியாக அறிய முடியவில்லை. ஆனால் குறித்த நேரத்தில் வானத்தில் ஜெற் விமானம் சென்றதாக மாணவிகள் கூறினர். இதே போன்ற திரவம் கடந்த 19 ஆம் திகதியும் சில மாணவிகளின் மேல் பட்டுள்ளது. நேற்றும் அவ்வாறு நடந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த திரவத்தின் மாதிரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. நேற்று முன்தினமும் வலம்புரி இது குறித்து செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-9.30)

## நாட்டுக்கு ஆபத்து...

கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் குறித்த சட்டமூலம் தொடர்பில் மீண்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையினையும் புலம்பெயர் அமைப்புக்களையும் திருப்திப்படுத்தவே மேற்படி அலுவலகம் அமைக்கப்படுகின்றது. இதன்மூலம் நாட்டினது பாதுகாப்பு நடைமுறைகளுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கும் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதுடன், தேசிய பாதுகாப்பும் பாதிக்கப்படும் என மாகல்கந்தே சுதத்த தேரர் தெரிவித்தார். (மு-11)

### தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களை

# ஐ.நா உதவிச் செயலருக்கு த.தே.கூட்டமைப்பு எடுத்துரைப்பு

இலங்கை வந்துள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜெப்பிரி பெல்ட்மனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்களுக்குமான சந்திப்பொன்று நேற்று கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உதவிச் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்த பின்பும் மக்களின் காணிகளை அரசாங்கமானது மீண்டும் அவர்களுக்கு மீளக்கொடுக்காமல் இருப்பதற்கான எவ்வித நியாயமான காரணங்களும் இல்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இக்காணிகள் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் இக்காணிகளில் ஆயுதப்படையினர் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுகின்றமையானது எமது மக்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கின்றமையினையும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில் காணாமற்போனோர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், பல்வேறு ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமர்ப்பணங்களின் அடிப்படையில் 20ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளதாகத் தெரிவித்த அதேவேளை, இவர்களில் அநேகமானோர் ஆயத குழுக்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல என்பதனையும் தெளிவுபடுத்தினார். தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்ததென்ற உண்மையையே மக்கள் அறிய விரும்புகின்றனர் எனத் தெரிவித்த அவர், அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்ததென்பதை அறியாத நிலையில் மக்கள் பாரிய மன அழுத்தத்தில் காணப்படுகின்றமையையும், இந்த நிலைமை தொடர முடியாது என்பதனையும் வலியுறுத்தினார். இந்த மக்களுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக காணாமற்போனோருக்கான அலுவலகம் விரைவில் நிறுவப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர், இந்தச் சட்டமூலமானது நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தினை சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசாங்கம் வழங்கியிருந்தமையைச் சுட்டிக் காட்டினார். எனினும் இதனை நீக்குவது தொடர்பில் மிகச் சிறியளவு முன்னேற்றமே காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், இலங்கை அரசாங்கமானது இந்த விடயம் தொடர்பில் மிகத் தெளிவான ஒரு உத்தரவாதத்தினை ஐ.நாவிற்கு வழங்கியிருந்தமையைச் சுட்டிக்காட்டிய அதேவேளை, அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் அந்த உத்தரவாதத்திற்கு எதிரான கருத்துக்களைத் தற்போது முன்வைப்பதனையும் எடுத்துக்காட்டினார். இலங்கை அரசாங்கமானது இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்க முடியாது என்பதனைச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கால தாமதமின்றி இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதனை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இந்த விடயம் தொடர்பில் அநேக விடயங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் உட்பட அனைத்து அரசாங்கங்களும் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பினை மாற்ற வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தன எனவும் தெரிவித்தார். 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் இதனை அடைந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, எமது மக்கள் இந்த விடயம் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். ஆனால், தற்போது இது தொடர்பில் ஒரு தடுமாற்றமான நிலைமை உருவாகியுள்ளது.

கால வரையறையின்றி இந்த விடயங்களில் நாம் காத்திருக்க முடியாது எனவும், தாம் அர்ப்பணிப்புடன் இந்த விடயத்தில் செயலாற்றுவதாகவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டினைப் பிளவுபடுத்தும் தீர்வினைக் கோரவில்லை. மாறாக அனைத்து அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் ஒத்துழைப்போடும் ஒப்புதலோடுமான ஒரு தீர்வினையே வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார். மேலும் சில்லறைதனமான அரசியல் விளையாட்டுக்களைச் செய்து எமது மக்களை மீண்டும் பாதிக்கப்பட்ட சமூகமாக மாற்றுவதற்கு இவர்களுக்கு இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

மனித உரிமை பேரவையின் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர், இந்தப் பிரேரணையை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது எனவும் இதனைத் துரிதமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். கொடுக்கப்பட்ட கால அவகாசத்தினைச் சரியாகப் பயன்படுத்தி பிரேரணையை உச்ச பட்சத்தில் நடைமுறைப்படுத்துவதில் தேவையான படிமுறைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் இருந்தமையினால் அரசாங்கம் கால அவகாசத்தினைக் கோரிய போது நாம் அதனை எதிர்க்கவில்லை. ஆனால், கடந்த சில மாதங்களில் இடம்பெற்றுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஆய்வு செய்கின்ற போது தமிழ் மக்கள் நிச்சயமாக திருப்தி அடையவில்லை எனத் தெரிவித்தார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவின் கருத்துக்களுக்குப் பதிலளித்த உதவிச் செயலாளர் நாயகம், இலங்கை நிலைவரம் தொடர்பில் ஐ.நா அவதானத்துடன் இருப்பதாகத் தெரிவித்தார். மேலும் புதிய அரசியல் யாப்பின் உள்ளடக்கமும் உருவாக்கும் நடைமுறைகளும் நீண்டகால அரசியல் தீர்விற்கு மாத்திரமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் செழிப்பிற்கும் மிக அத்தியாவசியமானதாகும் எனவும் தெரிவித்தார்.

ஒரு மணித்தியாலம் நீடித்த இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ரீ.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் இலங்கைக்கான ஐ. நா வதிவிடப் பிரதிநிதி உட்பட ஐ.நா அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (மு-11)

# நீர்ப்பற்றாக்குறையை தீர்க்க ஒரு மாதத்தில் கொள்கை தீர்மானம் வெளியிட வேண்டும்

## சிவாஜிலிங்கம் முதலமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நீர்ப்பற்றாக்குறையை தீர்ப்பதற்கு ஒரு மாதத்தில் கொள்கை தீர்மானம் தயாரித்து வெளியிட வேண்டும் என வட மாகாண முதலமைச்சரிடம் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த மூன்றரை வருடச் காலச் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் விசேட அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபா மண்டபத்தில் சபைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகியது. அதில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

45 மாதங்கள் கழிந்துள்ளன. வட மாகாண சபையை பற்றி பலவிதமான விமர்சனங்கள், செய்யாத விடயங்களை மிகைப்படுத்தி ஊடகங்கள் பல வெளியிட்டுள்ளன. அதனால் அமைச்சர்கள் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என கோரியிருந்தோம்.

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பி செல்கிறது என பொதுவாக பலருடைய கருத்து உள்ளது. அதை முதலமைச்சர் மற்றும் அவைத்தலைவர் மறுத்துள்ளார்கள். அதனால் இதை பற்றி திட்டவட்டமான புள்ளி விபரங்களுடனான அறிக்கையை முதலமைச்சர் வெளியிட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மிக முக்கியமானது. அமைச்சுக்களில் 100 நாள் வேலைத் திட்டத்தை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். அனைவரும் இணைந்து வேலை செய்ய வேண்டும். மக்கள் குற்றம் சாட்டும் பொழுது எல்லோருக்கும் தான் அவமானமாக இருக்கும். கூட்டுப்பொறுப்பு எமக்கு உள்ளது. முதலமைச்சரால் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகளை மக்கள் மத்தியில் வெளியிட வேணடும். மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றில் கணிசமான விடயங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது மாகாணத்தில் நிலத்தடி நீர் பாதிப்பு மற்றும் குடிநீர் பிரச்சினை மிகவும் பாரிய நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. அனைத்து மக்களுக்கும் பயன் கிடைக்க கூடிய வகையில் திட்டங்களை செய்ய வேண்டும். ஆனால நீரை பெறுவதற்கு பலர் தடையாக உள்ளார்கள்.

எங்கிருந்தும் தண்ணீர் இல்லை என்றால் கோடி ரூபா திட்டம் திரும்ப போகப் பேகிறது. வரட்சி உச்சக்கட்டம் எமது மாகாணத்தில் உள்ளது. குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அது தொடர்பில் நாம் அனைவரும் இணைந்து ஒரு மாதத்தில் கொள்கை தீர்மானம் எடுத்து செயற்பட்டால் நிதி மீள திரும்பிச் செல்லாது. நாம் மக்கள் மத்தியில் குற்றவாளிகள் ஆக முடியாது. நிதி மீள பெறப்பட்ட செய்தி வந்தால் மிக பெரிய கொந்தளிப்பு எமது மாகாணத்தில் ஏற்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கொள்கை திட்டம் தொடர்பில் ஒரு மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். நாங்கள் குற்றவாளி கூண்டில் நிற்க முடியாது.

கல்வியை பொறுத்த வரையில் ஆலோசனை குழு கூட்டத்தை சிறப்பாக நடத்தி பல விடயங்களை கலந்தாலோசித்து கல்வியை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட மாகோணத்தில் உள்ள வைத்திய சாலைகளில் வைத்தியர்கள் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு 200 வைத்தியர்களை வழங்குமாறு இந்தியாவிடம் கோரிக்கையை விடுங்கள். சைட்டம் பிரச்சினையால் வைத்திர் பற்றாக்குறை ஏற்படவுள்ளது. தனியார் மருத்துவக்கல்லூரிகள் ஒன்று அல்ல பத்து வர வேண்டும். அப்போது தான் ஏழை மாணவர்கள் கற்க முடியும் பணம் உள்ளவர்கள் வெளிநாட்டில் படித்து விட்டு இங்கு வந்து வேலை செய்யலாம் என்றால் ஏன் இங்கு படிக்க முடியாது. வடமாகாணத்தில் உள்ள பல வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வில்லை. பல ஆதார வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டும் அனைத்து அமைச்சிலும் 5 ஆண்டுகளுக்கான திட்டங்களை தயாரித்து பகுதி பகுதியாக செயற்படுத்தினால் தான் முன்னேற முடியும் என மேலும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சபையின் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தனது கருத்தை தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து பிழை பிடிப்பதிலேயே சிலர் குறியாக இருக்கின்றனர். மாகாண சபையில் பிழை பிடிப்பது தான் அவர்களின் கனவாகவும் இருக்கிறது. மாகாண சபை பல நல்ல விடயங்களைச் செய்து வருகிறது. செய்தவற்றைச்செய்தவை என்றுதான் சொல்ல வேண்டும்.

குறை பிடிப்பதற்கே குறைகள் தொடர்பில் பட்டியலை நீட்டிக் கொண்டு செல்கிறார்கள். இதேவேளை மாகாண சபையில் நிறைகள் குறைகள் இருக்கலாம். அவ்வாறு குறைகள் அல்லது தவறுகள் இருந்தால் அதனை திருத்துவதாகத் தான் அனைவரதும் செய்பாடுகள் இருக்க வேண்டும். அது தான் எதிர்காலத்தில் மாகாண சபையை முன்னோக்கி கொண்டு செல்ல உதவும் என தெரிவித்தார். (மு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...



தைச் சேர்ந்த றெக்ஸ் கமில்டன் என்ற 27 வயது பல்கலைக்கழக மாணவரே உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இதில் ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## புதிய அரசியல...

முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பே தீர்வாகும். எக்காரணம் கொண்டும் புதிய அரசியல் அமைப்பை தடுக்கக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் இதுவரை காலம் நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பு 19 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்தனை திருத்தங்களை செய்தும் நாட்டின் பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்மானம் ஒன்றை முன்னெடுக்க முடியாது உள்ளது. புதிய சமூகம் ஒன்றை நோக்கிய நகர்வுகளின் போது நாமும் அதற்கு ஏற்றவகையிலான நகர்வுகளில் செல்ல வேண்டும்.

ஆனால் இப்போது உள்ள அரசியல் அமைப்பின் மூலம் சமூக ஒருமைப்பாட்டையோ தீர்வுகளையோ பெற்றுக்கொள்ள முடியாது. எனவே இந்த அரசியல் அமைப்பு நமது நாட்டிற்கு பொருத்தமானது அல்ல. புரட்சிகள், போர்கள் முடிவடைந்த பின்னர் முதலாவது செயற்பாடாக அரசியல் அமைப்பு மாற்றத்தை செய்ய வேண்டும்.

அதற்கு நல்ல உதாரண மாக ரஷ்யா, சீனா மற்றும் இப்போது கியூபா அதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமை என்பவற்றை குறிப்பிட முடியும்.

ஆகவே இலங்கையிலும் இப்போது புதிய அரசியல் அமைப்பு ஒன்றே அவசியமாகும். 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் இறுதி இரண்டு திருத்தங்களை விடவும் ஏனைய 17 திருத்தங்களும் ஜனாதிபதியின் தனிப்பட்ட மற்றும் நிறைவேற்று அதிகாரத்தையும் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைக்கவில்லை.

ஆகவே புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. எனினும் புதிய அரசியல் அமைப்பில் பிரதான மூன்று விடயங்களை கருத்தில் கொண்டு கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது. தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருதல் மற்றும் அதிகார பகிர்வு ஆகிய விடயங்களில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் கருத்தாக அமைந்துள்ளது.

இதில் புதிய தேர்தல் முறைமையை உருவாக்குவதில் 80 வீதமான வேலைப்பாடுகள் நிறைவுக்கு வந்துள்ளன. ஒரு சில விடயங்களில் மாத்திரம் மாற்றங்களை கொண்டு வருவதில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் ஒரு சில கட்சிகளை தவிர ஏனைய அனைத்தும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளன. பிரதான கட்சிகள் இது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றது.

எனினும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் இதுவரையில் எந்தவித தீர்மானங்களையும் எடுக்கவில்லை. இப்போதும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆழமான கலந்துரையாடல் மட்டுமே இடம்பெற்று வருகின்றது. மாகாண இணைப்புகள், அதியுச்ச அதிகார பகிர்வு என்ற கருத்துக்கள் எதையும் இதுவரையில் எவரும் முன்வைக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட ஐக்கிய இலங்கை என்ற நிலைப்பாட்டில் இருந்தே கலந்துரையாடி வருகின்றனர்.

எனவே புதிய அரசியல் அமைப்பு நாட்டின் ஐக்கியத்திற்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை. மேலும் புதிய அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கான முன்னுரிமை, மற்றும் ஐக்கியம் என்ற பதம் என்ற விடயங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடப்பட வேண்டிய காரணிகள் அல்ல. இவை விவாதம் இன்றி முன்னெடுக்க வேண்டிய காரணிகளாகும். அதைத் தவிர்ந்து ஏனைய காரணிகளில் கலந்துரையாட வேண்டும். எனினும் புதிய அரசியல் அமைப்பே தீர்வாகும் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (மு-11)

## அனந்தி சசிதரனு...

கள் தொடர்பிலான மீளாய்வு செய்வதற்கான விசேட அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போதே அவைத்தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநர் நிதிய வைப்பில் இருந்த 144 மில்லியன் ரூபாய் பணத்தை மாகாண சபை பெற்று போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் ஆகியோருக்கு உதவும் வகையிலான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பணத்தை மாகாண சபை பெற்று ஒரு வருடம் கடந்த நிலையிலும், இதுவரை அந்த பணத்தில் ஒரு சதம் கூடச் செலவு செய்யப்பாது வட மாகாண பிரதம செயலாளரின் கணக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டு இருக்கிறது.

தற்போது மகளிர் விவகார அமைச்சராக அனந்தி சசிதரன் பொறுப்பேற்று உள்ளார். அவராவது இந்தப் பணத்தைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என அவைத்தலைவர் கோரினார். (மு-11)

## பேருந்து மீது...

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று 8.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக டிப்பர் மீது மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் டிப்பர் கண்ணாடி சேதமடைந்துள்ளது. எனினும் தாக்குதலை மேற்கொண்டவர் தப்பிச் சென்றுள்ளார். (மு-85)

## சி.ஐ.டியினரின்...

அதனையும் மீறி அவர் வந்தால் கறுப்புக் கொடி போராட்டம் நடத்தப்படுமென்றும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள சிவாஜிலிங்கத்திற்கும் நேற்றைய தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதாவது கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் இருந்து நேற்றுக் காலை சிவாஜிலிங்கத்திற்கு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு விசாரணைகளுக்காக கொழும்பிற்கு வருமாறு அழைத்துள்ளனர்.

ஆனால் தன்னால் கொழும்பிற்கு வர முடியாதென்றும் தேவையெனில் யாழில் வந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்த விசாரணைகளுக்கு முகங்கொடுக்கத் தயார் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளதாக சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (மு-9)

## புத்தூர் வங்கி...

குறித்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

புத்தூர் வங்கிக்கு அருகாமையில் உள்ள உணவகமொன்றில் தேநீர் அருந்தி விட்டு வீதியை வெள்ளைக் கோடு வழியே கடந்து மறுபக்கம் சென்ற முதியவரை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற பேருந்து மோதித் தள்ளியதில் பிரஸ்தாப முதியவர் 20 மீற்றர் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் சிவலை கிட்டிணன் (வயது73) என்ற முதியவரே உயிரிழந்துள்ளவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-9-30)

## 137-வது நாளா...

வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று 137 ஆவது நாளாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஜேர்மன் நாட்டிலிருந்து வருகைதந்த புலம்பெயர் உறவுகள் சிலர் அவர்களோடு கலந்துரையாடி அவர்களின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டறிந்தனர். (மு-281)


விற்பனைக்கு

கேரதீவு வீதியில் நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் நாவற்குழி பல நோக்கு மண்டபம் அருகில் 23 1/2 பரப்பு (நெற்பரப்பு) காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையற்றது. தொடர்பு:
(9846) 077 900 8439

உடனடி வேலைவாய்ப்பு

ஆவரங்காலில் இயங்கும் பிரபல நிறுவனமாகிய அவிக்னா மோட்டோர்ஸுக்கு
■ முகாமைத்துவ உதவியாளர் (பெண்)
■ முச்சக்கரவண்டி, மோட்டார் வாகனம் திருத்துநர் (ஆண்)
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
(9885) 077 174 8242

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுகதும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
♦ யாழ்ப்பாணம் ♦ கிளிநொச்சி ♦ நெல்லியடி ♦ பருத்தித்துறை ♦ வல்வெட்டித்துறை ♦ சாவகச்சேரி

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்
France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 0779 789 456 021 221 7781
இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய் செல்லும் பிரதான வீதி அருகில் (யூனியன் பிளேக்கிரவுண்ட்) முன்பாக 28 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட இரண்டு மாடிக்கட்டடம் தனித் தனியாகவோ, சேர்ந்தோ நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்
தொடர்பு:
(சி-9837) வர்ணன்- 0766604688

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
(C-91117)
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754
நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட உயர்தர சேவைகள்
• பல் வெண்மையாக்கல் • பல், வாய் வைத்தியசேவை
• வேரடைப்பு • சிறுவர் பற் சிகிச்சை
• மிதப்புப்பல் சீராக்கல் • மற்றும் பல நவீன சேவைகள்
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769

விற்பனைக்கு

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் 2 ஏக்கர் மேட்டுக்காணியில் புத்தம் புதிய வீடும், தென்னந் தோட்டமும் 3 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :
071 531 5500


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org